இறையியல்

கோலங்கள்

வடிவம் 2 வண்ணம் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி 1982

ஆசிரியர் குழு

பொறுப்பாசிரியர்கள் :

அருள்திரு. சீ. யோ. இம்மானுவேல்
அருள்திரு. விக்ரர் குருஸ் அ. ம. தி.
அருள்திரு. ஜே. நீக்கலஸ்
அருள்திரு. அல்போன்ஸ் பேர்னுட்

தொகுப்பு :

ம. ஜெறே செல்வநாயகம்
ய. தேவசகாயம்
ஜெரூட் செ. சவரிமுத்து
அ. சகாயதாசன்

அச்சிடலாம் :

"இறையியல் கோலங்கள்" இல் வெளிவரும் கருத்துக்கள் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு எதிரானவை அல்ல என்பதேயன்றி, இதுதான் திருச்சபையின் போதனை என்பதற்கில்லை.

+ போல் பெரேரா
கண்டி மறைமாவட்ட ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையியல் கோலங்கள்

(பருவ இதழ்)

வடிவம் 2 மார்கழி 1982 வண்ணம்: 3

வெளியிடுவோர்:

ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகம்

தேசிய குருத்துவக் கல்லூரி

அம்பிட்டி

கண்டி

(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே

		பக்கம்
1.	இலங்கை மண்ணிலே இறைவாக்கினர் ஆமோஸ்	1
2.	மனித அவதார சத்தியத்தின் சவால்கள்	7
3.	தொழிலின் மகத்துவம்	14
4.	வழிபாட்டில் ''சங்கீதங்கள்''	23
5.	அருளப்பரின் நற்செய்தியில் கிறிஸ்து	31
6.	திருச்சபையில் புனிதர்கள்	36
7.	Synopses	44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்புகுமுன்

இறையியல் என்பது, இறைவார்த்தைக்குப் பொருள் விளக்கமளிக்கும் வெறும் அறிவுசார்ந்த முயற்சி என்றோ, அன்றேல் விசுவாசக் கூற்றுக்கள் பற்றிய முறைமையான மெய்யியல் விளக்கமென்றோ தொடர்ந்தும் நாம் கருதமுடியாது. இவற்றிலும் மேலாக, இறைவார்த்தையின் ஒளியில் காலத்தின் அறிகுறிகளைப் புரிந்துகொள்ளத் தற்காலத் திருச்சபை மேற்கொள்ளும் ஒரு முயற்சியே இறையியல் என்று கூறலாம்.

பரிசேயரும் சதுசேயரும் தம் காலத்தைய வானியல் அடையாளங்களைப் புரிந்து கொண்டபோதிலும், இறைவனின் அறிகுறிகளைப் புரிந்து கொள்ளாமைக்காக இயேசு அவர்களைக் கண்டித்தார் (மத் 16: 1-4). இன்று, நமது காலத்தைய சமூக, பொருளியல், பண்பாட்டு, அரசியல் அறிகுறிகளை இறைவார்த்தையின் ஒளியில் புரிந்துகொள்ள நாம் முயலாவிட்டால், நாமும் கண்டனத்திற்குள்ளாவோம்.

நமது செயல்களுக்கான கோட்பாட்டையும், கிறிஸ்தவ விளக்கத்தையும், அச்செயல்களைத் திறனாய்வு செய்யும் அளவுகோலையும் தருவது இறைவார்த்தை; இச்செயல்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையாக, அர்த்தமுள்ள வகையில் நம்மத்தியில் வேரூன்றுவதற்கு அடித்தளமாக அமைவதோ, இன்றைய உலகின் அனைத்து நிகழ்வுகளுமே.

இந்த இதழில் மறைநூல்சார்ந்த, கோட்பாட்டு ரீதியான, ஒழுக்கவியல் ரீதியான பல்வேறு கட்டுரைகள் வெளிவருகின்றன. இவை யாவும் இறைவார்த்தையின் ஒளியில் நமது காலத்தின் அறிகுறிகள் பற்றிய அர்த்தமுள்ள பொருள்-விளக்கத்தைக் கொடுக்கும் என நம்புகின்றோம்.

அருள்திரு எஸ். ஜே. இம்மானுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனித உரிமைகளை அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக உறுதிப்படுத்தும் விதத்தில் திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் எடுத்துள்ள நிலைப்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். மனித உரிமைகளின் ஊற்றின்பால் நமது கவனத்தைத் திருப்புமாறு அவர் அழைப்பதோடு, எந்த மனிதக் காரணங்களும் இதைப் பறித்தெடுக்க முடியாது என்கிறார். மனித உரிமைகளுக்குத் திருச்சபை கொடுக்கும் புதிய முக்கியத்துவமானது, திருச்சபை வெளி உலகிற்கு ஏற்றவகையில் தன்னை மாற்றியமைத்துக் கொள்வதற்கு மற்றுமொரு உதாரணமே என்று சொல்வோரும் உளர். இந்த எதிர்ப்பைப்பற்றித் திருத்தந்தை 23-ம் அருளப்பர் தாம் இறப்பதற்குச் சிலநாட்களுக்கு முன் தமது அந்தரங்கக் குறிப்பேட்டில் எழுதியிருந்தார். ''இன்று என்றுமில்லாதவாறு—நிச்சயமாகக் கடந்த நூற்றாண்டுகளில் இல்லாதவாறு-நாம் கத்தோலிக்ருக்கு மட்டுமல்லாது, எல்லா மனிதருக்கும் சேவை செய்யுமாறு அழைக்கப்பட்டுள்ளோம். எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லா இடத்திலும், கத்தோலிக்க திருச்சபையின் உரிமைகளை மட்டுமல்லாது தனிமனித உரிமைகளை நாம் பாதுகாக்கவேண்டும். இந்தப் புதிய நோக்கிற்குக் காரணம் நற்செய்தி ஏடுகள் மாறிவிட்டன என்பதல்ல, மாறாக அவற்றை நாம் இன்னும் அதிகமாகப் புரியத் தொடங்கிவிட்டோம் என்பதே.''

நன்றி: *The Tablet*, 11 டிசெம்பர் 1982, பக். 1231

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மண்ணிலே இறைவாக்கினர் ஆமோஸ்!

— ம. ஜெறே செல்வநாயகம் —

மனித வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் பலவித சூழ்நிலைகளில் இறைவன் தமது மக்களை வழிநடத்துவதற்காகப் பணியாட்களை அனுப்பிக்கொண்டே இருக்கின்றார். இந்த இறைவெளிப்பாடு கிறிஸ்துவில் முழுமைபெற்றுவிட்டாலும், அதன் வரலாறு இன்றைய மனிதனுக்கு இறைவார்த்தையை எடுத்துக் கூறுவதாகவே உள்ளது. ஏனெனில் திருமறைநூல் என்றென்றைக்கும் இறைவார்த்தையாகவே நிலைத்திருக்கின்றது. மறைநூல் ஆசிரியரின் நோக்கத்தையும் அவரது இறையியல் கண்ணோட்டத்தையும் புரிந்துகொண்டு காலத்தின் இன்றைய அறிகுறிகளுக்குப் பொருள் விளக்கம் (interpretation) அளிப்பது விவிலியத் திறனாய்வுக் கொள்கையாகும்.

முற்காலத்தில் இறைமக்களாகிய இஸ்ராயேல் மக்கள் மத்தியில் சமூக நீதிக்காக அறைகூவல் விடுத்த ஆமோஸ் இறைவாக்கினரின் வார்த்தைகள் இன்றுகூட, காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டிருக்கும் எமது சமுதாயத்திற்குப் பொருள் பொதிந்ததாகத் திகழ்கின்றன. சமூகவாழ்விலும் ஆன்மீகவாழ்விலும் புரையோடிய நிலையில் வாழ்ந்த இஸ்ராயேலருக்கு ஆமோஸ் கூறியவற்றையும், அதன்மூலம் நமது சமூக ஆன்மீக வாழ்வுக்கு அவர் கொடுக்கும் அறிவுறுத்தல்களையும் இக்கட்டுரையில் நாம் ஆராய முயல்வோம்.

வரலாற்றின் வழியில்

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற பின்னர் முதன்முதலாக இஸ்ராயேல் மக்கள் 2ஆம் ஜெரோபோவாம் (786—746 கி.மு.) அரசனது ஆட்சியில் மிகவும் வளமான முன்னேற்றத்தையும் அமைதியையும் அனுபவித்துக்கொண்டிருந்த காலம் அது. முன்னர் பலவித படையெடுப்புக்களாலும் ஆக்கிரமிப்புக்களாலும் சொல்லொணுத் தொல்லைகளுக்குட்பட்டிருந்த அம்மக்கள், தற்பொழுது அண்மை அரசுகளின் பலவீனமான நிலையாலும், தம்வசமிருந்த அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பலத்தின் பொருட்டும் எவ்வித கலக்கமுமின்றி நிம்மதியாக வாழமுடிந்தது. பலகாலம் நீடித்திருந்த ஆபத்துக்களும் பயமும் அவர்கள் மனதினின்று படிப்படியாக நீங்கிவிட, அவர்களது விருப்பும் அக்கறையும் இவ்வுலக செல்வங்களின்பால் திரும்பி, அவற்றை அபகரிக்கும் பொருட்டு அநீதியான போக்குகளையும் சுரண்டல் வழிவகைகளையும் கையாள வழிவகுத்தது. அதாவது, 2ஆம் ஜெரோபோவாம் அரசன் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் புறத்தோற்றத்திற்கு வளமாக வாழ்ந்தபோதிலும் இறைவனின் சட்டத்தையும் அறநெறியையும் பொறுத்தமட்டில் பெரும் தவறிழைக்கும் விதத்தில் நடந்துகொண்டனர்; தமக்குள் பிரிவினையை ஏற்படுத்தினர்.

இலங்கைத்தீவை அன்று குடியேற்ற ஏகாதிபத்திய ஆதிக்கத்தினின்று விடுவித்துச் சுதந்திர பூமியாக்கும் விடுதலைப்பணியில் இங்குள்ள மக்கள் அனைவரும் எவ்வித மொழி, இன, மத வேறுபாடுகளுமின்றி ஒன்றுபட்டு உழைத்தனர். இதற்கு வரலாறு சான்று பகரும். ஆனால் பெற்ற சுதந்திரத்தை அனுபவித்தவர் யார்? சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்துவரும் அரசியல் சமூக வரலாறு அந்நிலைமையைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

இனத்திற்கு இனம், மதத்துக்கு மதம் எதிரான குரோத மனப்பான்மைகள் மக்களிடையே எழுந்தன. ஏன் பாடநூல்களின் மூலம் கூட வளர்க்கப்பட்டும் வந்தன. அதன் பிரதிபலிப்பாகக் கலவரங்கள், போராட்டங்கள் வெடித்தன; தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. அநீதியான சட்டங்களின்மூலம் ஓர் இனத்தை அடக்கி ஒடுக்குவதும், மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதும், இன்று சாதாரண விடயங்களாகிவிட்டன. ஆமோஸ் கண்ட அன்றைய இஸ்ராயேல் நாட்டின் நிலைமையையே இங்கும் காண்கிறோம். சுரண்டலாலும், ஊழல் நிறைந்த வழிகளாலும் தனியுரிமைச் செல்வாக்காலும் தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முற்படும் எந்த அரசும் தமது அழிவுக்குரிய அறைகூவலையே ஆமோஸிடமிருந்து கேட்கமுடியும்.

சமூக அமைப்பும் நீதி நிர்வாகமும்

சீர்கெட்ட நிர்வாகத்தாலும் சுரண்டலாலும் மனித உரிமைகளை மழுங்கடித்து ஏழைகளை துன்புறுத்தி, அப்பாவிமக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் பணம்படைத்தோர் சமூகம் ஒன்று இஸ்ராயேல் மக்களிடையே உருவானது. நீதித்துறை ஊழல்கள் நிறைந்ததாக, சட்டத்திற்கு முரணான முறையில் செயற்பட்டுப் பாமரமக்களின் பொருளும் செல்வமும் அபகரிக்கப்பட்டன. இத்தகைய சமூக அமைப்பிற்கு அடித்தள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக அங்கிருந்த நீதிச்சபைகளின் தொழிற்பாடு விளங்கியது என ஆமோஸ் மொழிகின்றார்.

'' நீதிமான்களைத் துன்புறுத்துகின்றீர்கள், கைலஞ்சம் வாங்குகிறீர்கள், ஊர்ச்சபையில் ஏழையின் வழக்கை ஏற்க மறுக்கிறீர்கள்'' (5 : 12) '' நீதிமானைப் பணத்திற்கும், எளியவனை ஒருசோடி செருப்புக்கும் விற்கிறீர்கள். ஏழைகளின் தலைகளை மண்ணில்பட மிதிக்கின்றீர்கள், தாழ்த்தப்பட்டோரின் நெறியைக் கெடுக்கின்றீர்கள்'' (2 : 6, 7). பணம் படைத்தோர் தமது செல்வாக்கைப் பயன்படுத்திக் கைலஞ்சம்கொடுத்து நீதிமன்ற வழக்குகளில் வெற்றிபெற்றனர். நேர்மையாக வழக்கைச் சொன்னவர்கள் ஏமாற்றமடைந்தனர். தமது பொருட்களை இழந்து அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். அங்கு நில உடைமையாளர்கள் தோன்றினார்கள். தம் நிலத்தில் வாழ்ந்த மக்களிடம் அதிக வரியை அறவிட்டார்கள். '' ஏழைகளை நசுக்கி அவர்களிடம் தானிய வரிபெற்று அதைக்கொண்டு செதுக்கிய கற்களால் வீடுகள் கட்டினார்கள்'' (5:11).

இறைவன் கொடுத்த சட்டத்தில் '' ஏழையொருவனுடைய வழக்கிலே நியாயத்தைப் புரட்டாதே. கள்ளமான காரியத்திற்கு விலகி இருப்பாயாக......... கைக்கூலி வாங்காதே, ஏனெனில் கைக்கூலிகள் ஞானிகளையுமே குருடராக்கி நீதிமான்களின் வார்த்தைகளையும் புரளச் செய்யும்'' (யாத். 23 : 6 - 8) என்றுளது. எனவே இறைவனுக்கெதிராக இஸ்ராயேல் மக்கள் செயற்பட்ட வேளைகளில் ஆமோஸ் அவர்களை எச்சரித்தார்.

நம் மத்தியிலும் நீதிநிர்வாகம் எவ்வகையில் இயங்குகிறது என்பது சிந்திக்கற்பாலது. நீதியும் சமத்துவமும் ஏட்டிலும் பேச்சிலும் உள்ளதே தவிர எதுவுமே நடைமுறையில் இல்லை. இன்று தமிழ்ச் சமூகத்தில் குறிப்பாக இளைஞர் மத்தியில் விரக்தி மனப்பான்மை, பழிவாங்கல், பயங்கரத் தாக்குதல்கள் போன்றவை நிலவுகின்றன. இதற்குக் காரணம் அநியாயச் சட்டங்களும், அரசின் அநீதப்போக்கும் என்றால் அது மிகையாகாது. அடிப்படை மனித உரிமைகளுக்கு முரணான நடைமுறைகள்கூட, பெரும்பான்மை வாக்குப்பலத்தினால் 'சட்டம்' என்ற அந்தஸ்துக்கு உயர்த்தப்பெற்று மக்கள் துன்புறுத்தப்படுவதைக் காண்கிறோம். உண்மையை எடுத்துச் சொல்லி நீதிக்காக வழக்காடுபவர்கள் ஏமாற்றமடைகின்றனர். விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சிறையில் வீணாகக் காலத்தைக் கழிக்கின்றனர். நீதியான கோரிக்கைகளுக்காகப் போராட்டம் செய்பவர்கள், தொழிலாளர் உரிமைகளுக்காக வேலைநிறுத்தம் செய்தவர்கள் வஞ்சகமான முறையில் பழிவாங்கப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய இஸ்ராயேல் சமூகத்தில் நீதிச்சபைகள் எவ்வாறு அநீதியாகச் செயற்பட்டனவோ அவ்விதமே இன்றும் எம்மிடையே நிகழ்கின்றன. மக்கள் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டிய அதே சட்டங்கள் அவர்களை அடக்கி ஒடுக்குபவையாக விளங்குகின்றன. சட்டத்தின்மேல் தமக்கு எவ்வித நம்பிக்கையுமே இல்லை என்ற நிலையில் மக்கள் இன்று இருக்கின்றார்கள். நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுபவர்கள் தமது சாட்சியத்தை நேர்மையாகச் சொல்லமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். நீதிமன்ற விசாரணைகள் யாவும் அதிகாரிகளின் முன்னேற்பாடான தீர்ப்புக்கு இசைவாக நெறிப்படுத்தப்படுகின்றன. இவை யாவும் பெருமளவிற்கு ஆமோசின் கால இஸ்ராயேல் சமூகத்தினைப் பிரதிபலிக்கின்றன.

பொருளாதாரச் சுரண்டல்

அன்று 'இனத்தின் தலைவர்கள்' எனப்பட்டவர்கள் பெரிய மாடிகள், திறந்த முற்றவெளிகளில் வயிறுற உண்டு குடித்து ஆடம்பர களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள் (6:4, 6). தன்னலமிக்க சமேரியப் பெண்கள் 'கொண்டுவா குடிப்போம்' என்று தம் கணவர்களைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டு, அவர்கள் ஏழைகளை ஒடுக்கி எளியவர்களை நசுக்கும்படியாக ஊக்கமளித்தார்கள். இப்பெண்களை ஆமோஸ் மிகவும் ஏளனமாக 'பாசான் பசுக்களே' என்கிறார் (4:1–3). இஸ்ராயேலரின் வர்த்தக தொழிற்பாடுகளில் ஏமாற்று வேலைகள் மலிந்திருந்தன. கள்ளத்தராசுகளும், எடைகுறைவான படிக்கற்களும் உபயோகிக்கப்பட்டன. புழுப்பிடித்த கோதுமைப் பதர்கள் ஏழைகளுக்கு மிக உயர்ந்த விலைக்கு விற்கப்பட்டன (8 : 5–6).

இன்று இத்தீவின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கி, பெருமளவு அந்நியச் செலாவணி உழைத்துக் கொடுக்கும் மலையக மக்களின் நிலைமையை நோக்கினால் வறுமையின் கோரப்பிடியில் அவர்கள் வாழ்வதை அவதானிக்கலாம். வாழ்க்கையின் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவை கிடையாத நிலையில் வாழ்க்கைத்தரத்தின் அடிமட்டத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். நிலச் சீர்திருத்தத் திட்டத்தின்கீழ்ப் பெருந்தோட்ட அமைப்புக்கள் படிப்படியாக மாற்றம்பெற, இம்மக்கள் வேலையிழந்து, வீடிழந்து அல்லற்படுகின்றார்கள்.

இம்மக்கள் தலைவர்களும் முதலாளிகளும் எந்தளவுக்கு இவர்களுக்கு உதவுகின்றனர் என்பது கேள்விக்குரியது. மிகவும் அற்ப சலுகைகளையும், வாழ்க்கைத் தரத்தை எவ்விதத்திலும் மாற்றமுடியாத அளவு ஊதிய உயர்வையும் கொடுத்துவிடுவதால் ஏது பயன்? இம்மக்களி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த, அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் கொண்டுவர, அவர்கள் தலைநிமிர்ந்து வாழ ஏற்ற வழிகள் மறைக்கப்படுவது மட்டுமன்றி மறுக்கப்பட்டும் விடுகின்றன.

நீதி, மனிதத்தன்மை ஆகியன இஸ்ராயேல் சமூகத்தில் இல்லா திருப்பதைக் கண்டு ஆமோஸ் "கற்பாறைகளின் மேல் குதிரைகள் ஓடுமோ? எருதுகளைக் கட்டி யாரேனும் கடலை உழுவாரோ?" (6 : 13) என்ற உவமானங்கள் மூலம் எப்பொழுதுமே செய்யத்தகாத ஒரு செயலை அவர்கள் புரிந்துள்ளதையும் அதன் பாதகத் தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றார்.

உடன்படிக்கையின் மக்களே!

தான் தேர்ந்துகொண்ட மக்களுடன் இறைவன் ஓர் உடன்படிக் கையை ஏற்படுத்தினார். தமக்கு ஏற்புடையவர்களாக அவர்கள் வாழும் பொருட்டு வாழ்க்கைக் கோட்பாடுகளையும், நீதி நெறிமுறைகளையும், அவர்களுக்குக் கொடுத்தார் (உப. அதி. 21—25). ஆயினும் இவற்றை மறந்து நேரிய வழியைக் கடைப்பிடிக்காது வாழ்ந்ததால் இறைவன் அளிக்கவிருக்கும் தண்டனையை முன்கூட்டியே ஆமோஸ் எடுத்துரைக் கின்றார். உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் என்று பிரிந்திருந்த அம்மக்கள் ஒரே உடன்படிக்கையைச் சேர்ந்திருந்தனர். ஒரே வாக்குப்பண்ணப் பட்ட நாட்டிற்குரியவர்களாயும், ஒரே இறைவனின் மக்களாயும் விளங் கினர். இருப்பினும் தம் சுயநலத்தின்பொருட்டு இத்தனை பெருமைக் குரிய பண்புகளையும் பொறுப்புக்களையும் மறந்து செயற்பட்டனர். தமது உலக செல்வ நிலைமை குறித்து அவர்களுக்கிருந்த செருக்கை இறைவன் வெறுப்பதையும், அவரின் தீர்ப்பின் முன்னிலையில் இவர்கள் மிகச் சிறியவர்களாகவே விளங்குகின்றனரென்றும் (7 : 25), உடன் படிக்கையின் பொருட்டு இனிமேல் இவர்கள் பெருமையையோ வெற் றியையோ பெறப்போவதில்லை, மாறாகத் தண்டனையையே பெறுவரென் றும் ஆமோஸ் கூறுகின்றார்.

புதிய உடன்படிக்கையின் மக்களான இலங்கைக் கிறிஸ்தவர்கள் கூட தம்மிடையே மொழி, இன, குல பாகுபாடுகள் பாராட்டுவதையும், ஒருவரையொருவர் சுரண்டுவதையும் கண்கூடாகக் காண்கின்றோம். ஏற்றத்தாழ்வற்றதும் நீதியும் சமத்துவமுமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கவேண்டிய கிறிஸ்தவர்கள், பல வேறுபாடுகளையும், உட்பூசல் களையும் தம்முள் வளர்த்து வருகின்றனர். நீதியையும், ஒற்றுமையை யும் நிலைநாட்ட வேண்டியவர்கள், கிறிஸ்து கொடுத்த நற்செய்திக்கு எதிராகச் செயற்படும்பொழுது அது பாரிய தவறு மட்டுமன்றி, பிற ருக்கு இடறலாகவும் அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டவர்களின் புனித பணி

ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை வாழ்வுபெறக் குரல் கொடுக்கவும், அநீதப் போக்கைக் கண்டித்து நெறிதவறிய செயல்களைச் சுட்டிக்காட்டவும் பொருளாதாரச் சுரண்டல்களையும் ஏமாற்று வர்த்தகத்தையும் ஒழித்து நேரிய வழியைக் காட்டவும் ஆமோஸ் இறைவாக்கினரை இறைவன் அன்று அனுப்பினர். கிறிஸ்துவும், எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும் (லூக். 4 : 18) இறைவனால் அனுப்பப் பெற்றூர்.

இதே பணியைச் செய்யும் பொறுப்பு இன்று திருச்சபைக்கு வழங்கப்பட்டுளது. அப்பொறுப்பை ஏற்று '' திருச்சபையும் மனித பலவீனத்தால் பாதிக்கப்பட்ட எல்லாரையும் அன்புடன் அரவணைக்கிறது. வறியவரும், துன்புற்றவருமான தன் நிறுவுநரின் உருவை வறியோரிலும் துன்புறுவோரிலும் காண்கிறது. அவர்களின் தேவைகளை நிறைவு செய்ய முயல்கிறது '' (வத். ஏடுகள் : திருச்சபை, எண் 8). இப்பணியில் திருச்சபை தனக்குள்ள உரிமையுடன் செயலாற்றவேண்டுமென்று வத்திக்கான் சங்கத்தின் மற்றொரு ஏடு வலியுறுத்துகின்றது. அதாவது '' மனிதனின் அடிப்படை உரிமைகளுக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் தேவைப்படும்பொழுது, அரசியல் அமைப்பைச் சார்ந்த காரியங்களில் கூட ஒழுக்க சம்பந்தமான தீர்ப்புக்களை அளிக்கவும் திருச்சபைக்கு உரிமை உண்டு.'' (இன்றைய உலகில் திருச்சபை, எண் 76).

இத்திருச்சபையின் பணிக்குத் தம்மையே அர்ப்பணித்த குருக்கள், துறவிகள் இதில் முன்னின்று பணிபுரிய அழைக்கப்பட்டுள்ளார்களென்பதை எவரும் மறுக்கமுடியாது. அப்படியாயின் இன்று இலங்கை மண்ணில் சமூக நீதிக்காகக் குரல்கொடுக்க ஆமோசைப் போன்ற இறைபணியாளர்களின் சேவை இன்றியமையாததாக விளங்குகிறது. இறைபணியாட்களான ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் இன்று அடிப்படை உரிமைகள், நீதி, சமத்துவம், தொழிலாளர் நலன் என்பவற்றை நிலைநாட்ட அழைக்கப்பட்டுள்ளார்கள்.

எவரேனும் இத்தகைய புனித பணியைச் செய்யும் குருக்கள், துறவியரை ஆலோசனைகளுடன் நெறிப்படுத்துவதை விடுத்து, அவர்களைப் புறக்கணித்துவிடுவதோ அல்லது நிபந்தனையற்றவிதத்தில் தடுத்துவிடுவதோ, அன்று இஸ்ராயேல் மக்கள் மத்தியில் அமாசியாஸ் என்ற தலைமைக்குரு புரிந்த தகாத செயலை ஒத்ததாகவே அமையும்.

காலத்தின் தேவையை உணர்ந்து, இறை அழைப்பின் சவாலை ஏற்று, எம்மக்களுக்குப் பணிபுரிய, திருச்சபையின் உறுப்பினர்களே முன்வருவீர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித அவதார சத்தியத்தின் சவால்கள்

அருள்திரு. எஸ். ஜே. இம்மானுவேல்

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பிறப்புவிழாவைக் கொண்டாடும்போது அப்பிறப்பு நிகழ்ச்சி, எங்கோ நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியாகவோ அல்லது ஓர் உயர்ந்த மதத்தலைவருக்கு எடுக்கும் ஒரு விழாவாக மாத்திரமோ கொண்டாடுவதில்லை. மாறாக, மனித அவதாரத்தின் முழு உண்மையையும்—அதாவது மனிதர் அனைவரையும் மீட்பதற்கு இறைவன் மனிதனாக, மனிதர் மத்தியிலே பிறந்த மறையுண்மையைத் திருவழிபாட்டில் நான்கு வாரங்களுக்கு அனுட்டிக்கின்றார்கள். மனுஉடல் ஏற்கை (மனித அவதாரம்) என்ற மறையுண்மைபற்றிய வளர்ந்துவரும் நமது அறிவினைக்கொண்டு நோக்கும்பொழுது, கிறிஸ்தவரல்லா மதத்தினரும், சமூகத்தினரும் இக்கொண்டாட்டத்திலே பங்குகொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தென்படுகிறது.

முன்னர் வழங்கிவந்த நிலையியல் நோக்கின்படி மனுஉடல் ஏற்கை என்பது இறை பிரசன்னமற்றிருந்த பாவ உலகிற்கு இறைவன் இறங்கு வதையும் அங்கிருந்து மேலெழுவதையுமே குறிப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று திருச்சபையானது, நாம் இவ்வுலகினை மாற்றமுற்றுப் பரிணமித்துவரும் (evolutionary) ஓர் உலகாக நோக்கும்படி எம்மைத் தூண்டுகின்றது. இதன்படி மனிதஅவதாரம் என்பது ஏற்கெனவே பல வழிகளில் தமது பிரசன்னத்தால் நிரப்பப்பட்டிருக்கும் உலகிலே இறைவன் தன்னை மனிதர் காணக்கூடிய வடிவிலே இவ்வுலகில் அவதரிப்பதைக் குறிக்கின்றது. அதாவது மனுவுடல் ஏற்கை என்பது இறைவன் இவ்வுலகிலே பிரசன்னமாயிருக்கின்றாரா இல்லையா என்பதல்ல; ஆனால் என்றும் உலகில் இருக்கும் இறைவனை, மனிதன் எவ்விதத்தில் உணர்ந்துகொள்கிறான் என்பதே முக்கியமாகும். பலதரப்பட்ட மத. பண்பாட்டு, சமூக அமைப்புக்களினுள்ளே இறைபிரசன்னத்தை மனிதன் உணர்ந்துகொள்ளும்பொருட்டே கடவுள் மனிதனானார்.

மனுவுடல் ஏற்கை எனும் மறையுண்மை தரும் இனிய செய்தி யாதெனில் இறைவன் முழுமனிதனாக மனுக்குலத்திலே உதித்து, மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனுக்கு முழுமையான மீட்பையும், விடுதலையையும் அளித்தார் என்பதே. இதுவே இச்செய்தியின் தனிப்பெரும் பொதுமைப் (univesal) பண்பாகும். ஆனால் இச்செய்தி தரும் சவால்களையும் பொறுப்புக்களையும் ஏற்கும்போதே அது இன்றைய உலகிற்குப் பயனுள்ளதாகவும் பொருத்தமாகவும் அமையும். இச்சவால்களையும் பொறுப்புக்களையும் நாம் விளங்கி ஏற்றுக்கொள்வதற்கான உணர்வையும் விருப்பையும் எம்மத்தியில் உருவாக்கும் நோக்குடனேயே திருச்சபையின் வழிபாட்டு நாட்காட்டி மனித அவதாரத்தை ஒரு தனி வழிபாட்டு நிகழ்ச்சியாகக் கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட ஆயத்த காலமாகவும் அதற்குப்பின் சிந்தனை நாட்களாகவும் இந்நிகழ்ச்சியை விரிவுபடுத்தியுள்ளது.

இந்தச் சவால்களையிட்டு நாம் விழிப்புணர்வுகொள்ளுமாறு திருச்சபையின் ஆசிரியம் (Magisterium) அண்மைக் காலங்களில் பின்வருமாறு செயலாற்றியுளது.

1. பிரதான மதங்களுள்ள எமது சூழலில் நேரியதொரு உரையாடலை ஏற்படுத்துமாறு மனித அவதாரம் நம்மைத் தூண்டுகிறது.

இலங்கையில் நாம், பிரசித்திபெற்ற மூன்று மதங்களாகிய இந்து, இஸ்லாமிய, பௌத்த மதங்களின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எமது மதம் தவிர்ந்த ஏனைய மதங்களில் நல்லனவை எதுவுமில்லையென்றோ, அம்மதங்கள் சாத்தானின் செயல்களென்றோ எண்ணி நாம் வாழ்ந்த நாட்கள் மலையேறிவிட்டன. இன்று நாம் மற்ற மதங்களைப் பொறுத்தவரை எமக்குள்ள சவால்களாலும் பொறுப்புக்களாலும் உந்தப்பட்டு ஒரு புது விழிப்புணர்ச்சியும், முதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

> " பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை, இயற்கையின்போக்கிலும் மனித வாழ்க்கையின் நிகழ்ச்சிகளிலும் காணப்படும் மறைந்த ஓர் ஆற்றலைப்பற்றிய உள்ளுணர்வு பல்வேறு மக்களிடையே காணக்கிடக்கின்றது; சிலநேரங்களில் அவர்கள் ஒப்புயர்வற்ற ஒருவரைத் தெய்வமாகவும் தந்தையாகவும்கூட அறிந்து ஏற்கின்றனர். இதனால் அவர்கள் வாழ்வு ஆழ்ந்த மறையுணர்வால் நிறைந்திருக்கின்றது...... மறைகள் ஒவ்வொன்றும் படிப்பினைகளையும் வாழ்க்கைச் சட்டங்களையும் திருச்சடங்குகளையும் கொண்ட வழிகளை அளித்துப் பலவழிகளிலே மனித உள்ளத்தின் அமைதியின்மையை அகற்ற முயல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மறைகளிலே காணக்கிடக்கின்ற உண்மையானதும் புனிதமானதுமான எதையும் கத்தோலிக்கத் திருச்சபை உதறித்தள்ளுவதில்லை. தன்னுடைய கொள்கைகளிலிருந்து பலவற்றில் வேறுபடினும் மக்கள் யாவர்க்கும் உள்ளொளி ஊட்டும் உண்மையின் ஒளிச்சுடரைப் பலகாலும் காட்டும் வாழ்க்கை நடைமுறை வழிகளையும் சட்டங்களையும் கோட்பாடுகளையும் திருச்சபை உண்மையாகவே மதிக்கிறது...... எனவே முன்மதிப்போடும் பரம அன்போடும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கும்வாழ்விற்கும் சான்றுபகர்ந்து, கிறிஸ்தவமல்லா மறைகளைச் சார்ந்தவரோடும் உரையாடல் நடத்தவேண்டும்; அவர்களோடு ஒத்துழைக்கவேண்டும். இவற்றின் வழியே அவர்தம் ஆன்மீக ஒழுக்க நன்மைகளையும்,அவர்களிடையேயுள்ள சமூகம், பண்பாடு என்பவற்றில் காணப்படும் மதிப்புக்குரிய கூறுகளையும் அறிந்து, காத்து, வளர்க்கவேண்டும் எனத் திருச்சபை தன் மக்களுக்கு அறிவுறுத்துகிறது. (2-ம் வத்திக்கான், கிறிஸ்தவமல்லா மறைகள், 2).

2. நமது பண்பாட்டுச் சூழலிலே திருச்சபையின் அனைத்து அம்சங்களையும் உண்மையாகப் பண்பாட்டுமயமாக்கும்படி மனித அவதாரம் நம்மைத் தூண்டுகிறது.

ஒரு குறிப்பிட்ட மொழி, கலாச்சாரம் மரபுச் சூழலிலே இறைவன் மனிதனானர் என்பது மேலே குறிப்பிட்ட காரணிகள் மனித அவதாரத்திற்குப் புறம்பானவையல்ல என்பதைக் காட்டுகிறது. ஒரேகடவுளின் நற்செய்தியானது எல்லா இன மக்களுக்கும் அளிக்கப்பட்டதென்பதால் அது ஒவ்வொரு பண்பாடு, இனம், மொழி, மரபு என்பவற்றில் வேரூன்றவேண்டுமென்பது திண்ணம். ஆரம்பகால யூத கிறிஸ்தவர்கள் இதை உணர்ந்தே தமது மரபில் இருந்துவந்த விருத்தசேதனச் சடங்குமுறைகளைப் புதிய, கிரேக்க கிறிஸ்தவர்கள்மீது திணிக்கவில்லை. மாறாக, கிறிஸ்தவம் கிரேக்கமயமாக்கப்படவும், பின்னர் உரோமைமயமாக்கப்படவும் அவர்கள் அனுமதித்தார்கள். எனவே எல்லா நாடுகளிலும் கிறிஸ்துவின் செய்தி அர்த்தம் நிறைந்ததாகவும், வாழ்வோடு தொடர்புள்ளதாகவும், பயனுள்ளதாகவும் திகழவேண்டுமென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக, இடைக்காலத்தில் இப்பண்பாட்டுமயமாக்கலானது வேகம் குறைந்து சென்று ஒரு இலத்தீன் கலைகலாச்சார அமைப்பிலே நிலைபெற்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட கிறிஸ்தவம் பல பண்பாடு களோடும், இரண்டறக் கலக்கக்கூடியதாக இருக்கவில்லை. ஏனெனில் அது ஏற்கெனவே மேற்கத்தைய பாணியில் இலத்தீன் மயமாக்கப்பட்ட தாகவும் நிறுவன அமைப்புடையதாகவும் இருந்தது. இதனுலே கிறிஸ் தவம் ஓர் அந்நியநாட்டு மதமாக இறக்குமதிசெய்யப்பட்ட மதமாகக் கருதப்பட்டது. மண்ணின் மயமாக்கலைப் பொறுத்தமட்டில் திருச்சபை யானது மறுப்பை அல்லது தயக்கத்தை நீண்டகாலமாகக் கடைப்பிடித் தது. ஆயினும் பின்னர் தன் தவறை உணர்ந்து மண்ணின் மயமாக் கலின் முக்கியத்துவத்தையும் இன்றியமையாத்தன்மையையும் நிலைநாட் டும்படி 2-ம் வத்திக்கான் சங்கம் வழியாக அழைப்பு விடுத்தது.

"உண்மையில் மனுவுருவெடுப்பின் திட்டப்படி கிறிஸ்துவில் வேரூன்றி, அப்போஸ்தலர்களாகிய அடித்தளத்தின்மேல் எழுப் பப்பெற்ற இப்புதுச்சபைகள் வியத்தகு பொருள்மாற்ற முறையில் கிறிஸ்துவுக்கு மரபுரிமையாகக் கொடுக்கப்பட்ட எல்லா நாடு களின் செல்வங்கள் அனைத்தையும் தம் வயப்படுத்திக்கொள்கின் றன. இச்சபைகள் மக்களின் வழக்கங்களிலிருந்தும் மரபுகளிலிருந் தும், அவர்களுடைய ஞானத்திலிருந்தும், கோட்பாடுகளிலிருந் தும், கலைகளிலிருந்தும், அறிவியல்களிலிருந்தும்... உதவக்கூடிய அனைத்தையும் உள்ளேற்றுக்கொள்கின்றன...... இம்முறையில் எங்ஙனம் இம்மக்களின் மெய்யியலையும் ஞானத்தையும் துணையாகக் கொண்டு விசுவாசம் புத்தியை நாடுகிறது என்றும், எங்ஙனம் பழக்கவழக்கங்களையும் வாழ்வின் பொருளையும் சமூக அமைப்புக் களையும் இறைவெளிப்பாடு கற்றுத்தரும் ஒழுங்குகளோடு..... இசை வித்துக்கொள்ளமுடியும் என்றும் தெளிவாக அறிந்துகொள்ளக் கூடும்......ஒவ்வொரு பண்பாட்டின் மனப்போக்கிற்கும் பண்பிற் கும் தக்கமுறையில் கிறிஸ்தவ வாழ்வு தழுவியமையும்." (திருச் சபையில் மறைபரப்புப்பணி 22.)

மணிலா தேசத்தைச் சார்ந்த கர்தினல் சின் என்பவர் 'ஆசியா -விலே கிறிஸ்தவ சமயத்தின் எதிர்காலம்' என்ற தலைப்பில் உரையாற் றும்போது "ஆசியத்திருச்சபை பண்பாட்டு மயமாக்கப்பட்டாலன்றி அதற்கு எதிர்காலம் இல்லை" எனத் தெளிவாகக் கூறினர்.

இவ்வாறு கூறும்போது மேற்கு நாடுகளைச் சார்ந்த புனிதமான (இறந்துபோன அல்லது இன்னும் உயிர் வாழ்கின்ற) மறைபரப்பாளர் களை நிந்திப்பதாகவோ இகழ்வதாகவோ கருதவில்லை. அவர்கள் தமது காலத்திற்கேற்ற பணியாளர்களாக விளங்கினர்கள். அதனுல் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்ப்பாடுகள் மத்தியிலும் தம் நாட்டுத் திருச்சபையைப் பிரமாணிக் கத்துடன் இங்கு மறுநடுகை செய்தார்கள். அவர்கள் தம்மால் எவ்வ ளவு திறமையாக இதற்காகப் பாடுபடமுடியுமோ அவ்வளவிற்குப் பாடுபட்டு தம் வாழ்க்கையையும் அதற்காக அர்ப்பணித்தார்கள். இன்று ஐந்து நூற்றாண்டுக்காலனித்துவ ஆட்சி முடிந்துவிட்ட கட்டத் தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாமே திருச்சபையை இலங்கையில் பண்பாட்டுமயமாக்கலின் சவாலை ஏற்கவேண்டியவர்களாக இருக்கின் றோம். இரண்டாயிரம் ஆண்டு அனுபவங்களினூடாகத் திருச்சபை யானது முதிர்ச்சியடைந்துவிட்டது என்ற ஒரு சௌகரியமான உணர் வோடு இருந்துகொண்டு இனி மேலதிக மாற்றங்கள் தேவையில்லை என்று எண்ணி நம்மை நாம் ஏமாற்றிக்கொள்ளகூடாது. திருச்சபை யின் தந்தையர்கள் திருச்சபையானது தொடர்ச்சியாக மறுமலர்ச்சி யடைந்து வரவேண்டுமென உரைத்தார்கள். இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கம் மீண்டும் எடுத்துரைக்கின்றது. எனவே மேற்கத் தைய கலாச்சாரத்தின் பிடியிலிருந்து நம்மை விடுவித்துத் திருச்சபையை இலங்கை மயமாக்க இக்கருத்து எம்மை ஊக்குவிக்கவேண்டும். இவ் வாறான ஓர் அவதாரத்தின் அருளுக்காகவே இலங்கைத் திருச்சபை மன்றாடவேண்டும்.

3. சீரழிந்து வருகின்ற நமது சமூக பொருளாதார சூழலிலே தீவிரமான ஓர் இறைவாக்குரைக்கும் பணிக்கு மனிதஅவதாரம் நம்மைத் தூண்டுகிறது.

மனிதனை மீட்டுப் புதியதொரு மனுக்குலத்திற்கென அவனைப் புதுப்பிக்கவுமே இறைவன் முற்றிலும் மனிதனானார். வீடில்லாத ஒரு குடும்பம், அடிமையுற்ற ஓர் இனம், வேதனையுறும் ஒரு தாய், திகைப் புற்றிருக்கும் ஒரு தந்தை, ஒதுக்கப்பட்டவர்கள் விலக்கப்பட்டவர்கள் போன்றோரை மீட்பதற்காகவே கிறிஸ்து வந்தார் என்ற உண்மைகளைக் கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சி எமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

வேதாகமம் கூறுகின்ற இறைவன், நீதியும் இரக்கமும் நிறைந்த வராக இருந்தால், புதியஏற்பாட்டிலே மனித அவதாரம் எடுத்த இறை வன், விண்ணரசின் மதிப்பீடுகளான அன்பு, இரக்கம், கருணை குண மாக்கல் என்பவற்றை ஆரம்பித்துவைக்க வந்தார் என்பது உண்மை யானால், இறைவனின் ஊழியனாகவும் அவரின் சின்னமாகவும் தன்னைக் கூறிக்கொள்ளும் திருச்சபையானது நம்மைச் சூழவுள்ள சமூக பொரு ளாதார பாதிப்பின் கூக்குரலுக்கும் வேதனைகளுக்கும் ஊமையாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிடாகவும் இருக்கமுடியுமா ? கடந்தகாலத்தில் ஓரளவு முரண்பட்ட தன்மை நிலவியிருந்ததை 2-ம் வத்திக்கான் சங்கம் ஒப்புக்கொண்டு துன்பப்படுவோர் ஒதுக்கப்படுவோரோடு ஒன்றித்திருக்கும் ஒரு திருச்சபையே தேவையென்று வலியுறுத்துகின்றது.

ஆயர்களுக்கான விசேட அழைப்பிலே :

கிறிஸ்தவ படிப்பினைகளை ஆயர்கள் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற முறையில் எடுத்துக்கூறவேண்டும். அதாவது மக்கள் மனத்தை அலைக்கழிக்கும் பிரச்சினைகளுக்கும் கேள்விகளுக்கும் தகுந்த பதிலிறுக்கும் பான்மையில் அவைகள் அமைதல்வேண்டும்... ஏழைகளிடத்திலும் தாழ்ந்த வகுப்பினரிடத்திலும் அவர்கள் தனிக் கவனம் செலுத்தவேண்டும். ஏனெனில் இவர்களுக்கு நற்செய்தி போதிக்கவே ஆண்டவர் அவர்களை அனுப்பியுள்ளார்'' (திருச்சபையில் ஆயர்களின் மேய்ப்புப்பணி, 13).

இன்றைய உலகின் துன்பங்களில் தனது ஒன்றிப்பை எடுத்தியம்பி 2-ம் வத்திக்கான் சங்கம் இவ்வாறு கூறுகின்றது :

'' இக்கால மனிதரின், குறிப்பாக வறுமையிலும் மற்றெவ்வித துன்பத்திலும் வாடுவோரின் மகிழ்வும் நம்பிக்கையும் ஏக்கமும் கவலையும் கிறிஸ்துவைப் பின்பற்றுவோரின் மகிழ்வும் நம்பிக்கையும் ஏக்கமும் கவலையுமாகும் '' (இன்றைய உலகில் திருச்சபை, 1.)

உலகிலும் உலகிற்காகவுமே திருச்சபை உள்ளது என்பதை 'இன்றைய உலகில் திருச்சபை' எனும் நீண்ட ஏட்டிலே 2-ம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது.

உலகியல் முன்னேற்றமும் மனித சமுதாயத்தினைச் சிரமைப்பதும் இறையரசை அமைக்க முக்கியமானவை என்று திருச்சபை உணர்ந்துள்ளது. மேலும் மனிதனின் சமூக, பொருளாதார வளர்ச்சியானது மறைபரப்புதலுக்கு ஆயத்தமாகவோ அல்லது ஆதாயமாகவோ கருதப்படாமல் இது முழுத்திருச்சபையினதும் மிக முக்கிய பணி என்பதைத் திருச்சபை உணர்ந்துள்ளது. மனிதனின் மாண்பு, சுதந்திரம், நீதி, அன்பு என்பவற்றிற்காக இறைவாக்கு உரைத்துப் புரட்சிப் பணிபுரியவே திருச்சபை அழைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்திலே சமத்துவமின்மை, முரண்பாடுகள், அநீதி, அடக்குமுறை என்பன வெறும் அரசியல் விவகாரங்கள் எனக் கருதப்பட்டுத் திருச்சபையால் புறக்கணித்துவிடப்பட்டிருந்தது. ஆனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று குரல் அற்றோரின் குரலாக, ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலாக, ஏழை, எளியவர்களைச் சார்ந்து நிற்கும் திருச்சபையாக விளங்கி இறைவாக்கு உரைத்து ஊழியம்புரிவது திருச்சபையின் இயல்பும் பணியுமாகும். எனவே துன்புறுவோர் ஏழைகளுடன் திருச்சபை ஒன்றித்து நிலைத்திருக்கவேண்டும் என்பது தெளிவாகும்.

'பணம் படைத்த' திருச்சபையாக நின்று, ஏழைகளை ஆதரிப்பதை விடுத்து, ஏழை எளியவர்களின் திருச்சபையாக, அவர்களோடு வாழும் திருச்சபையாக, அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபையாக மாறுவதற்கான வழிவகைகளைத் தேவைக்கேற்பக் கண்டறிதல் வேண்டும். மண்ணின் மயமாக்கப்பட்ட ஒரு திருச்சபையால் மட்டுமே அது வாழும் பகுதியின் தேவைகளையும் பிரச்சனைகளையும் உணர்ந்து சமூகத்தில் நலிந்தவருக்கும், ஒடுக்கப்படுவோருக்கும் குரல் கொடுக்க முடியும்.

மதம் ஒரு தனியார் விவகாரம் என்றும், மக்கள் துன்பப்படும் சமூக, அரசியல் அநீதிகளிலே ஈடுபடக்கூடாது என்று கருதுவது ஒரு மார்க்சிய கொள்கையாகும். கிறிஸ்தவ திருச்சபை தொகையிலும், வகையிலும் எவ்வளவு சிறியதாயிருப்பினும் உண்மைக்காகவும், நேர்மைக்காகவும், நீதிக்காகவும் முழுமையாகத் தன்னுடைய சக்திகளை ஈடுபடுத்தவேண்டும்.

இறைவன் மனிதர் மத்தியிலே முழு மனுவுரு எடுத்து நம் மீட்பை ஆரம்பித்தார். அதேபோலத் திருச்சபையும் நம்நாட்டிலே மண்ணின் மயமாக்கப்பட்டு, சகல மதங்களுடனும் நேர்மையான உரையாடல் உறவுகொண்டு, நம் மக்களுக்கு நேர்மையிலும் நீதியிலும் பிறக்கும் சமாதானத்திற்காகத் தீவிரமாகச் செயற்படுவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலின் மகத்துவம்

— ஒரு கிறிஸ்தவ கண்ணோட்டம்

— ஸ்ரனி அன்ரனி —

உலகிலுள்ள யாவும் மனிதனையே தம் மையமாகவும் சிகரமாகவும் கொண்டுள்ளன. மனிதனின் வளர்ச்சியும், சமூக வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. இன்றைய உலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொழிலாள வர்க்கத்தை உலகத்தையே ஆட்டிப் படைக்கும் சக்தியாக மாற்றியுள்ளது. மனிதனது சமூக பொருளாதார அரசியல் வாழ்வில் இறைத் தன்மையைப் புகுத்தி மீட்புத்திட்டத்திற்கேற்ப அவற்றை வழி நடத்துவதே இறைமயமாக்குதலின் நோக்கமாகும். எனவே இன்றைய சூழலில் தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து செயல்படுதலும், மனிதனது மாண்பைப் பாதுகாத்தலும் அவசியமாகவுள்ளது.

மனித வாழ்வில் தொழிலின் முக்கியத்துவம்

மனித வாழ்வின் மூன்றிலொரு பகுதி தொழிலில் ஈடுபடுதலிலே செலவிடப்படுகின்றது. இன்று தொழிலானது மனித வாழ்வில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் மனிதர் தம் உயிரையோ, வாழ்க்கையையோ, கௌரவத்தையோ பணயம் வைத்து வேலை தேடிச் செல்வதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது. வேலையின்மையால் தற்கொலை செய்யும் நிலைக்குக் கூட சிலர் தள்ளப்பட்டிருக்கிறார்கள். எனவே தொழில் மனிதனுக்கு அத்தியாவசியமானது. தொழில்நுட்ப, கைத்தொழில், விஞ்ஞான முன்னேற்றங்கள் பல நாடுகளின் சமூக பண்பாட்டு வாழ்க்கை முறைகளில் பாரிய மாற்றங்களைக் கொணர்ந்துள்ளன. தொழிலில் மனிதன் செய்ய வேண்டிய பகுதியை இன்று இயந்திரங்கள் செய்யுமளவிற்கு தொழில் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. மனிதன் உற்பத்தி செய்யும் பொருட்கள் மனிதனைவிட உயர்ந்ததாகக் கருதப்படும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. ‘‘நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள் புதுவகையான பிரச்சினைகளைத் தோற்றுவித்ததோடு நின்றுவிடாது, சிலவேளைகளில் வேலையின்மைப் பிரச்சினைக்கும் வித்திட்டுள்ளன. அதே சமயம், மனிதனது திறமைக்கும் ஆற்றல்களுக்கும் சவால் விடுப்பதாக உள்ளன’’ என்றார் இரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாம் அருளப்பர் சின்னப்பர். இன்றைய மனிதனது பண்பாடு, வளர்ந்து வரும் நவீன தொழில் நுட்ப அபிவிருத்தியாலும், கைத்தொழில் வளர்ச்சியின் விளைவுகளாலும் வழிநடத்தப்படுகின்றது பண்டைய காலத்தில் தொழிலை மனிதன் உயிர்வாழ்வதன் நோக்கமாகக் கொண்டே செய்தான். முன்னைய காலகட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் தனது வாடிக்கையாளருக்குத் தேவையான பொருட்களை தானே உற்பத்தி செய்யும் நிலையிருந்தது. ஆனால் இன்று ஒரு வேலையின் ஒரு பகுதியையே அவன் செய்யவேண்டியுள்ளது. இதனால் அவன் தான் உற்பத்தி செய்யும் பொருளில் ஒருவித நிறைவை, திருப்தியை, பெறுவதில்லை. எனவே இன்றைய சூழலில், தொழிலின் நோக்கை, குறிக்கோளை மீளாய்வு செய்து இறைமயமாக்குவது அவசியமாகின்றது.

மீட்பு வரலாற்றில் கடவுள் தம்மைப் பலவகைகளில் வெளிப்படுத்தியுள்ளார். இத்தகைய இறை வெளிப்பாடுகளைப்பற்றி விசுவாசத்தோடு இயைந்த சிந்தனையே இறையியல் என்று கூறலாம். கடவுள் தம்மைப் படைப்புக்களின் மூலமும் வெளிப்படுத்தியுள்ளார். "மனிதர் தமது உழைப்பால் படைத்தவரின் பணியை நடத்திச் செல்வதாகவும், தம் அயலவருடைய நலன்களைக் கவனிப்பதாகவும், இறைத்திட்டம் வரலாற்றில் நிறைவேறத் தம் சொந்த உழைப்பால் உதவுவதாகவும் உரிமையோடு கருதமுடியும்" என்று 23ம் அருளப்பரின் 'அவனியில் அமைதி" என்ற சுற்றுமடல் கூறுகின்றது. எனவே மனிதன் ஆதியிலிருந்தே உலகில் இறைத்திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்ற இறைவனால் அழைக்கப்பட்டுள்ளான். இறைத்திட்டத்தை உலகில் நிறைவேற்றி, அதன்மூலம் தனது அழைத்தலுக்கேற்ப வாழவே ஆதியிலிருந்தே மனிதனைக் கடவுள் ஆயத்தம் செய்தார்.

பழைய ஏற்பாட்டில் தொழில் (உழைப்பு)

மனிதன் உழைத்து தனது வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்ற நியதி மனித இயற்கைக்கும் அப்பாற்பட்ட தொன்றன்று. எவ்விதம் சூரியன் அதிகாலையில் உதிக்கின்றதோ, எவ்விதம் சிங்கமானது இரைதேடிச் செல்கின்றதோ, அதேபோன்று மனிதனின் உழைப்பும் இயற்கைக்கு உட்பட்டதே. கடவுள் உழைப்பை ஒரு தண்டனையாக, துன்பமாக மனிதன் மேல் சுமத்தவில்லை. மாறாக ஆதியிலிருந்தே மனிதனுக்கு ஆண்டவன் தனது இறைத்திட்டத்தை உலகில் செயற்படுத்த அழைப்பு விடுத்தார். இத்தகைய கருத்தை ஆகியாகமத்தின் முதல் அதிகாரம் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது "நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதனைக் கீழ்ப்படுத்துங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆதி 1.28). ஞான ஆகமங்களும் உழைப்பின் மகத்துவத்தை, மேன்மையை வலியுறுத்திக் கூறுகின்றன. "சோம்பேறியே. எறும்பினிடம் போய் அதன் வழிகளை கவனித்துப் பார்த்து ஞானத்தைக் கற்றுக் கொள்" என்று பழமொழி ஆகமம் கூறுகின்றது. மனிதன் தன் கையால் உழைத்து வாழ்வது மனிதத் தன்மைக்குக் கீழ்த்தரமான தல்ல. சவுல் மன்னன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு முன்பு ஒரு விவசாயியாகவும், தாவீது அரசன் ஒரு மேய்ப்பனாகவும் இருந்ததை சாமுவேல் ஆகமத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். எனவே உழைப்பதன் மூலம் மனிதன் இறைத்திட்டத்திற்கு அமைவாக செயற்பட்டு வருகின்றான். மனித வாழ்வை நெறிப்படுத்த கடவுள் மனிதனுக்கு வழங்கிய சட்டதிட்டங்கள் கடவுளின் இறைத்திட்டத்தை வெளிப்படுத்துபவையாக உள்ளன.

எனவே உழைப்பு என்பது பாவத்தின் விளைவால் விளைந்த தண்டனை அன்று. மாறாக, முதல் பெற்றோர் பாவத்திற்கு உட்படுவதற்கு முன்பே, படைப்புக்கள் மேல் ஆட்சி செலுத்த மனிதனுக்கு கடவுள் விடுத்த அழைப்பின் விளைவே உழைப்பு என்று கூறலாம் "ஆண்டவராகிய கடவுள் மனிதனை அழைத்து அவ்வின்பவனத்தை உழுது பேணும்படி அவனை அங்கு விட்டுவைத்தார்" என்று ஆதியாகமம் கூறுகின்றது (ஆதி 2.5). கடவுள் மனிதனை தனது இறைத்திட்டத்தைச் செயற்படுத்த தன்னோடு பங்காளியாக்கினார். உலகை மனிதன் பொறுப்பில் ஒப்படைத்து, தனது திட்டத்தைச் செயற்படுத்தும்படி அவனைப் பணித்தார். கடவுள் மனிதனை உருவாக்கியதும் அவனுக்குத் துணையை உருவாக்கிக் கொடுத்ததும் ஒரு உழைப்பாளியைப் போன்று கடவுள் செயற்பட்டதாக ஆதியாகமத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது. மனிதன் கடவுளின் படைப்புப் பணியைத் தொடர்ந்து உலகில் மேற்கொள்ளவும் இறைவனால் அழைக்கப்பட்டுள்ளான். கடவுளின் பிரதிநிதியாக உலகில் அவன் படைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளான். எனவே மனிதன் உழைப்பை ஒரு சுமையாகக்கருதி வெறுக்கக்கூடாது. இத்தகைய கருத்தை சீராக் ஆகமம் வலியுறுத்துகின்றது: "கடினமான தொழிலை வெறுக்காதே; கடவுளால் உண்டாக்கப்பட்ட பயிர்த் தொழிலைக் கைவிடாதே" என்று தொழிலின் உன்னதத் தன்மையை எடுத்துக் கூறுகின்றது. மனிதன் உழைக்கும் போது இறைத்திட்டத்திற்கேற்ப செயற்படுகின்றான்.

எனினும் முதல் பெற்றோரின் பாவத்தினால் உழைப்பு மனிதனுக்கு கடினமானதாக, கடவுளின் சாபத்தினால் மாறியதென்று ஆதியாகமம் கூறுகின்றது. கடவுளின் கட்டளையை மீறிய மனிதனுக்கு சாபம் பரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகக் கிடைத்தது. மனிதன் கடவுளுக்கு எதிராக, அவர் கொடுத்த கட்டளையை நிராகரித்ததன் விளைவாக உலகில் மனிதனிடையே பொறாமையும், போராட்டமும், சச்சரவுகளும் தோன்றின. கடவுளை மனிதன் எதிர்த்ததன் விளைவாக பூமியும் சபிக்கப்பட்டது. “உன்பொருட்டு பூமி சபிக்கப்பட்டிருக்கும்; நீ உழைத்துத்தான் அதன் பலனை உண்பாய். அது உனக்கு முட்களையும், முட்செடிகளையும் விளைவிக்கும்” என்று ஆதியாகமம் கூறுகின்றது.

உழைப்பு மனிதனின் இயற்கைக்கு மாறானதல்ல. இறைவன் மனிதனைத் தனது சாயலாகப் படைத்ததோடு நின்றுவிடாது, அவரின் பணியை உலகில் தொடர்ந்து நிறைவேற்ற மனிதனுக்கு அழைப்பு விடுத்தார். கடவுளின் சாபத்தினால் உழைப்பு மனிதனுக்கு ஒருவித வேதனையையும் துன்பத்தையும் கொடுத்தாலும் உழைப்பு ஆதியில் இருந்தே கடவுளின் திட்டமாகக் கருதப்பட்டது. உலகை மனிதன் ஆண்டு நடத்தும் போது கடவுளின் திட்டத்தையே செயற்படுத்துகிறான். எனவே உழைப்பு கடவுளின் சாபத்தால் விளைந்ததன்று; ஆனால் கடவுளின் ஆசியால் மனிதனுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட ஒரு பணியாகும். எனவே, உழைப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கும் மனிதன் உழைக்காமல் வாழும் போது தனது மாண்பை இழந்துவிடுகிறான். மனித உழைப்பின் மாண்பு மனிதனின் சமூகப்பாவங்களால் பாழடிக்கப்படுகின்றது. மனிதனின் சுயநலத் தன்மையாலும், மனிதர்கள் ஒன்றாகச் சேர்ந்து கடவுளின் திட்டத்தை உலகிற் செயற்படுத்த மறக்குந் தன்மையாலும் உழைப்பு மனிதனுக்குத் துன்பமாகத் தோன்றுகிறது. மனித உழைப்பை இத்தகைய தன்மைகளில் இருந்து மீட்டு உழைப்பை இன்பமானதாக மாற்றுவதற்கு அன்பும், பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கும் வளர்க்கப்பட வேண்டும். எனவே பழைய ஏற்பாட்டின்படி உழைப்பு மனிதனுக்கு அத்தியவசியமானதென்பதும் மனிதன் உழைப்பை மனப்பூர்வமாக இறைவனின் நியதியை ஏற்று உலகில் இறைத்திட்டத்தை நிறைவேற்றவே ஆதியில் இருந்தே அழைக்கப்பட்டுள்ளான் என்பதும் புலனாகின்றது. மனிதன் கடவுளின் சட்டங்களை உழைப்பின் மூலம் நிறைவேற்றுகின்றான். எனினும் மனிதன் இயற்கையாகவே உழைப்பாளியாகத் தனது மனிதத் தன்மையை நிறைவு செய்கின்றான். கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் இரண்டு வழிகளில் படைப்பின்மேல் தனது ஆதிக்கத்தைச் செலுத்துகிறான். தனது சந்ததியை பெருக்குவதிலும், உலகைத் தனது உழைப்பால் மேம்படுத்துவதன் மூலமும் மனிதன் கடவுளின் படைப்புப்பணியில் பங்காளியாகிறான். மனிதன் கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்ததினால் உழைப்பு துன்பமாக தோன்றினாலும் படைப்பின் மேல் அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தும் ஆதிக்கம் அவனிடமிருந்து பறிக்கப்படவில்லை. மாறாக, உழைப்புக் கடினமானதாகவும் துன்பமானதாகவும் அவனது பாவத்தால் மாறியது.

உழைப்பு பாவத்தின் விளைவால் அநீதிக்கும், அடக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் தோற்றுவாயாக அமைந்துள்ளது. இதனால் உழைப்பு ஒரு சுமையாகவும் மனிதரிடையே வெறுப்பையும், பிளவுகளையும் தோற்றுவிக்கிறது. பழைய ஏற்பாட்டிலேயே ஒரு மனிதனின் உழைப்பு எவ்விதம் சுரண்டப்பட்டதென்பதை எரேமியாஸ் இறைவாக்கினர் கூறுகிறார். ''அநியாயமாய்த் தன் வீட்டையும் அக்கிரமமாய்த் தன் அறைகளையும் கட்டுகிறவனுக்கு ஐயோ கேடு. அவன் தனது அயலானைக் கூலியின்றி உழைக்கச் செய்கிறான்'' (எரே 32.13). ஆமோஸ் ஆகமமும் ஏழைகளைச் சுரண்டி வாழ்வோரைப் பற்றி எடுத்துக் கூறுகின்றது: ''நீங்கள் ஏழைகளை நசுக்கி, அவர்களிடம் தானிய வரி வாங்கி' அதைக் கொண்டு செதுக்கிய கற்களால் வீடுகட்டினீர்கள். அந்த வீடுகளில் நீங்கள் வாழப்போவதில்லை'' என்று ஆமோஸ் சாடுவதை அறியக்கூடியதாக உள்ளது. யாத்திராகமத்தை நோக்குகின்ற போது இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக்கப்பட்ட போது பலவந்தமாக உழைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஆனால் யாவே (கடவுள்) அவர்களை அத்தகைய மனிதத்தன்மையற்ற கொடூரத்தினின்று மீட்டார். பழைய ஏற்பாட்டில் யாவே அடிமைத்தனத்தினின்று மக்களை விடுவித்தார். புதிய ஏற்பாட்டில் இயேசு யூத சட்டதிட்டங்களில் இருந்து மக்களை மீட்டு மீட்பிற்கு வழி வகுத்தார். இன்று உழைப்பை இத்தகைய அடிமைத்தனங்களில் இருந்து மீட்டு அதை மனிதனுக்கு இன்பந்தரக்கூடியதாக மாற்ற ஆவன செய்வதே, உழைப்பை இறைமயமாக்குவதன் நோக்கமாகும்.

புதிய ஏற்பாட்டில் உழைப்பு

புதிய ஏற்பாட்டில் உழைப்பு மனித உழைப்பைக் குறிக்கின்றது. இத்தகைய கருத்தை மத்தேயு நற்செய்தியில் காணலாம். ''மகனே இன்று என் திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்'' (மத் 21.28). நற்செய்தியாளர்கள் நற்செய்தியின் முக்கிய அடிப்படையான உண்மையை மட்டும் முன்வைத்தே உழைப்பை நோக்கினார்கள். மீட்புத் திட்டத்தில் கிறிஸ்துவின் பணியையே முக்கியமானதொன்றாக கருதினார்கள். நற்செய்தியாளர்கள் அருளப்பரும், லூக்காசும் கிறிஸ்து ஒரு உழைப்பாளி என்ற உண்மையைக் கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இயேசு ஓர் உழைப்பாளி என்ற கருத்தை மத்தேயு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நற்செய்தியில் ''இவர் தச்சன் மகன் அல்லரோ?'' என்ற கேள்வியை புகுத்துவதன் மூலம் சாதாரணமாக இதைக் குறிப்பிட்டார். புனித சின்னப்பரும் தனது நிருபத்தில் கிறிஸ்து உலகை மீட்பதற்காக ஓர் அடிமையைப் போன்று உலகில் பிறந்தார் என்று குறிப்பிடுகிருர். நற்செய்தியாளர்கள் இயேசு ஒரு தச்சுத் தொழிலாளி என்பதை மறந்தவர்களாய் நற்செய்தியில் அவரது தொழிலை விவரிக்கவில்லை. ஆனல் அவர்கள் கிறிஸ்துவைப் போதகராகவும், புதுமை செய்பவராகவும், நோய்களைக் குணமாக்குபவராகவும் தமது நற்செய்தி மூலம் எடுத்துக் கூறுகின்றனர். அவர்களின் நோக்கில் கிறிஸ்துவின் பணி உலகை மீட்பது ஒன்றே எனக் கருதியமையால் கிறிஸ்து ஒரு தச்சுத் தொழிலாளி என்பதை மறந்தார்கள்.

கிறிஸ்து உழைப்பின் சாபத்தை தனது வாழ்க்கையின் மூலமும், பாவத்தின் சாபத்தை தனது மரணத்தின் மூலமும் நீக்கினுர். மனிதனின் சுயநலத்தால் இன்று உழைப்பு அடிமைத்தனத்தின் பிடியில் சிக்கிக் கிடக்கின்றது. எனவே உழைப்பில் இறைத்தன்மையை புகுத்தி புது மெருகூட்டவேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனினதும் கடமையாகும். புதிய ஏற்பாட்டில் 'அழைத்தல்' என்பது உளமாற்றத்திற்காக கிறிஸ்துவின் அழைப்பையே குறிக்கின்றது. எனவே நற்செய்தி நேரடியாக உலக வழக்கில் குறிப்பிடும் தொழிலுக்கான அழைப்பைக் குறிக்கவில்லை. புனித சின்னப்பர் கூடாரம் அமைக்கும் தொழில் செய்வதற்கல்ல, நற்செய்தியை புறவினத்தாருக்கு அறிவிக்கும் அப்போஸ்தல பணிக்கே அழைக்கப்பட்டார். எனினும் நற்செய்தியானது மனிதன் உழைத்து வாழவேண்டியதன் அவசியத்தை மறுக்கவில்லை. நற்செய்தி நோக்கில் ஸ்நாபக அருளப்பர் ஆயக்காரருக்கும் படைவீரருக்கும் கூறிய ஆலோசனையே தொழிலைப்பற்றி நற்செய்தி கொண்ட கருத்தாகும். பிறரைச் சுரண்டி வாழாது நேர்மையுடன் தத்தம் வாழ்க்கை நிலைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்படி அறிவுரை கூறப்படுகின்றது (லூக் 3.12). கிறிஸ்து தனது உவமைகளில் உலகில் இடம்பெறும் தொழில்களைக் குறிப்பிடுகின்ருர். ஆனல் இத்தகைய வெவ்வேறு வகையான தொழில்களின் தன்மை மாண்பு பற்றி எதுவும் கிறிஸ்து கூறியதாக நற்செய்தியில் ஆதாரம் எதுவுமில்லை. தொழில் எத்தகையதாயிருந்தாலும் மனிதன் பொருமையின்றி, சுயநலமின்றி, அன்புடனும் பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்குடனும் உழைக்கும் போது தொழில் இறைமயமாக்கப்படுகின்றது. வர்க்கபேதமற்ற புதிய இஸ்ராயேல் சமுதாயத்திலே, இறைவாக்கினர்கள், நற்செய்தியாளர்கள், அப்போஸ்தலர்கள் என்ற பல்வேறு வகைப்பட்ட பணிகளைச் செய்வோரைக் காணக்கூடியதாகவிருந்தது. கிறிஸ்தவர்கள் தமது உழைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் மூலம் இறையரசை கட்டியெழுப்ப வேண்டுமென்பதே கிறிஸ்துவின் பணியாகும். இத்தகைய கருத்தை புனித சின்னப்பரும், தெசலோனிக்கேயருக்கு எழுதிய திருமுகத்தில் வலியுறுத்துகின்றார். உழைப்பின் மகத்துவத்தையும் உழைக்கவேண்டியதன் கடமையையும் வலியுறுத்தி, உழைக்காமலிருப்போரைக் கடுமையாகச் சாடுகின்றார். தெசலோனிக்கக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் இரண்டாவது வருகை அண்மையிலுள்ளது என்று எண்ணி உழைப்பதைக் கைவிட்டு, பணக்காரரின் தயவில் வாழ நினைத்தார்கள். கிறிஸ்துவின் இரண்டாவது வருகை வரையும் உழைத்து வாழவேண்டும் என்று புனித சின்னப்பர் வேண்டுகோள் விடுத்தார். "உழைக்காதவன் உண்ணாதிருக்கட்டும்" என்று ஆணித்தரமாக எடுத்துக்கூறினார் (2 தெச 3.7—12).

மீட்புத் திட்டத்தில் கிறிஸ்துவின் பணி

புனித அருளப்பர் தமது நற்செய்தியில் கிறிஸ்துவின் பணி மீட்பு ஒன்றே என்று குறிப்பிடுகின்றார். "என்னை அனுப்பினவரின் விருப்பத்தின்படி நடந்து அவரின் வேலையைச் செய்து முடிப்பதே எனது உணவு" என்று கிறிஸ்துவின் பணியைப் பற்றி குறிப்பிடுகின்றார் (அரு 4.34. அவர் அனுப்பியவரை விசுவசிப்பதே கடவுளுக்கேற்ற செயல் என்று புனித அருளப்பர் கடவுளின் மீட்புப்பணியைப்பற்றிக் கூறுகின்றார். கிறிஸ்து செய்த புதுமைகளும் கடவுளின் செயல்களுக்கு அடையாளமாகவும், மீட்புத்திட்டத்தை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன. கிறிஸ்துவின் மீட்புப்பணி சிலுவையிலே நிறைவு பெற்றது. "நீர் எனக்குச் செய்யக் கொடுத்த பணியைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மகிமைப்படுத்தினேன்" என்று கிறிஸ்து தமது பணியின் நிறைவு பற்றி எடுத்தியம்பினார். (அரு 17.14 கிறிஸ்துவின் மீட்புப் பணியின் நிறைவை அருளப்பர் தமது நற்செய்தியில் அழகாக ஒரேஒரு வார்த்தையில் வெளிப்படுத்துகின்றார். "எல்லாம் முடிந்தது" இத்தகைய மீட்புப் பணியே நிறைவான மாபெரும் மீட்புப் பணியென்று புதிய ஏற்பாட்டு நற்செய்தியாளர்கள் கருதுகின்றனர். கிறிஸ்துவின் முன்மாதிரிகையான பணி தொழிலுக்கு மகத்துவத்தையும் ஓர் உன்னத நிலையையும் பெற்றுக் கொடுத்தது.

மீட்புத் திட்டத்தில் தொழிலே இறைமயமாக்குதல்

கடவுளின் படைப்பும், மனித மீட்பும் கடவுளின் மீட்புத்திட்டத்தின் பகுதிகளாகும். மீட்பு கடவுளின் படைப்பின் நிறைவு படுத்தலே என்று கூறலாம், படைப்பின் இறைவன் மனிதனை உண்டாக்கி உலகை அவன் ஆதிக்கத்தில் ஒப்படைத்தார். அவன் இறைவனோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றித்து கடவுளின் மகிழ்ச்சியில் பங்கெடுக்கவே அவனுக்கு அழைப்பு விடுத்தார் என்று திருச்சங்க ஏடு கூறுகின்றது (இன்றைய உலகில் திருச்சபை, எண் 12). கிறிஸ்து உலகில் தோன்றியதன்மூலம் கடவுளின் மீட்புத் திட்டம் மேலும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. ஏனெனில் அவரே இறைவெளிப்பாட்டின் கருப்பொருளானர். திருச்சங்கத்தின் இன்றைய உலகில் திருச்சபை என்ற ஏட்டில் கிறிஸ்து இரண்டாவது ஆதாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (எண் 22). கிறிஸ்து கடவுளை மனிதருக்கு வெளிப்படுத்துவதோடு நின்றுவிடாது மனிதன் தன்னையே முழுமையாக அறிந்து கொள்ளவும் செய்கின்றார். எனவே எல்லா மனிதரும், எல்லாத் தொழில்களும் ஒருவிதத்தில் உள்ளார்ந்த ரீதியாக கிறிஸ்துவோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. மனிதன் உழைக்கும் போது எதிர்நோக்கும் துன்பங்களை கிறிஸ்துவின் பாடுகளோடு இணைத்துப் பார்க்கும்போது உழைப்பு இறைமயமாக்கப்படுகின்றது. தன்னலமின்றி, தியாகம் நிறைந்த வாழ்க்கை மூலம், பிறரோடு பகிர்ந்து வாழும்போது உழைப்பு இறைத் தன்மையை எய்துகின்றது.

''பல சகோதரருள் முந்தின பேறுனவர் என்ற முறையில் சாவுக்கும், உயிர்ப்புக்கும் பின் தம் ஆவியானவரின் கொடையால் விசுவாசமும், அன்பும் கொண்டு தம்மை ஏற்கும் அனைவரையும் ஒரு புதுச் சகோதரச் சமூகமாய் ஏற்படுத்தினர். இச் சமூகமே திருச்சபையாகிய அவரது உடல். இத்திருச்சபையில் ஒருவர் ஒருவருக்கு உறுப்பினராயிருந்து யாவரும் தங்களுக்கு அருளப்பட்டுள்ள வெவ்வேறு கொடைகளின் படி ஒருவருக்கொருவர் பணிபுரிகின்றனர்'' (எண் 32). கிறிஸ்துமேல் கொண்ட விசுவாசத்தாலும் அன்பாலும் பிணைக்கப்பட்டு வாழுகின்ற இச் சமூகம் இயற்கையாக வாழ்கின்ற சமூக அமைப்பையே அடிப்படையாகக் கொண்டது. அதாவது உழைப்பின் மூலம் ஒன்ருகக் கூடி ஒரே சமூகமாக வாழும் வர்க்கமே இவ்விசுவாச மக்களின் அடித்தளமாகும். மனிதனை ஒன்ருகக் கூட்டி சமூகத்தைக் கட்டியெழுப்ப உழைப்பு உதவாவிட்டால் அவ்வுழைப்பால் எதுவித பயனுமில்லை. தொழில் நுட்ப, விஞ்ஞான முன்னேற்றங்கள் மனிதன் படைப்பின் மேல் கொண்ட ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதோடு நின்றுவிடாது, முன்பு சிலவற்றை அடைவதற்கு தெய்வீக சக்திகளை நம்பியிருந்த மனிதனின் மனநிலையையும் மாற்றியமைத்தது. மனிதன் பிறருக்காக வாழும் போது அவனுடைய உழைப்பும் வாழ்வும் அர்த்தமுள்ளதாக மாறுகின்றது. மனிதனின் நேர்மையான உழைப்பின் மூலமும், தன்னலமற்ற சேவையின் மூலமுமே தொழில் மகத்துவம் அடையக்கூடிய வாய்ப்புண்டு. ஒரு கிறீஸ்தவன் தனது உழைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில் இறையரசின் மதிப்பீடுகளான (kingdom values) அன்பு, நீதி, நேர்மை, பகிர்ந்துவாழும் மனப்பாங்கு போன்றவற்றைப் புகுத்துவ தன் மூலம் உழைப்பை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரலாம், இதன் மூலம் கிறிஸ்தவன் உலகில் இறையரசை நிலைபெறச் செய்கின்றான்.

தொழில் நுட்ப முன்னேற்றங்களால் மனிதன் தாழ்த்தப்பட்டு இயந்திரங்களுக்கு அடிமையாகும் நிலையும் ஏற்பட இடமுண்டு. மனிதன் மாண்புள்ளவன்; தொழில் நுட்ப மாற்றங்கள், முன்னேற்றங்கள் மனித வளர்ச்சிக்குத் துணை செய்ய வேண்டுமேயொழிய மனிதனை அடிமையாக்கக் கூடாது. ஏனெனில் மனிதனுக்காகவே அனைத்தும் உண்டாக்கப்பட்டன; அவனுக்கே அவற்றை ஆண்டு நடத்த அதிகாரம் வழங்கப்பட்டது. இத்தகைய கருத்தை வத்திக்கான் திருச்சங்க ஏடுகள் வலியுறுத்திக் கூறுகின்றன. தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் மனிதன் வளர்ச்சியடைய வேண்டும். மனிதன் பிறரில் தங்கியிருக்கும் தன்மையும், ஒத்துழைக்கும் மனப்பாங்கும் மனித சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உதவியாயிருக்கும்.

கிறிஸ்து இன்னும் தமது பணியைத் தூய ஆவியின் ஏவுதலைக் கொண்டு மனிதன் மூலமாக செயற்படுத்துகின்றார். மனிதனைத் தூய்மைப்படுத்தி தமது இறைத்திட்டத்தைச் செயற்படுத்த விழைகின்றார். மனித வாழ்வின் முன்னேற்றமும், இறையரசைக் கட்டியெழுப்புதலும் உள்ளார்ந்த ரீதியாக தொடர்புபட்டுள்ளது மனித உழைப்பால் வாழ்வு முன்னேற்றமடையும்போதும், உழைப்பில் இறைத்தன்மை புகுத்தப்படும் போதும் அங்கு இறையரசு கட்டியெழுப்பப்படுகின்றது. மனிதனது தொழில் மனிதனோடு மனிதன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பை அளிக்கக்கூடிய தன்மையைத் தன்னகத்தே கொண்டுள்ளது. உழைப்பில் ஏற்படும் விரக்தியும் வெறுப்பும், கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் புதுப்பொலிவு அடைகின்றது. எனவே மனித உழைப்பு இறைத்தன்மையோடு இயைந்ததாக மாறுகின்றபோது உழைப்பு அர்த்தமுள்ளதாகின்றது. அத்தோடு இறைத்திட்டத்திற்கேற்பவும் மனிதனை அது வழிநடத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டில் "சங்கீதங்கள்"

— ம. ஞாயன் —

முன்னுரை

விவிலிய நூலின் ஒரு முக்கிய பகுதியான சங்கீதங்கள் அன்று முதல் இன்றுவரை எமது செப வழிபாடுகளில் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றன. இந்த சங்கீதங்கள் இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகளான இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி, உயர்வு, தாழ்வு என்பவற்றைச் சித்தரிக்கின்றன. இஸ்ராயேல் மக்கள் இவ்வாறு தங்கள் வாழ்க்கையின் பல கட்டங்களிலும் இறைவனைப் புகழவும், வாழ்த்தவும், அவருக்கு நன்றி கூறவும், அவரது உதவியைக் கூவி அழைக்கவும் சங்கீதங்களைப் பாடி மகிழ்ந்தார்கள்.

புதிய ஏற்பாட்டின் இஸ்ராயேல் மக்களாகிய நாம் இந்த சங்கீதங்களை எமது அன்றாட வாழ்வில் செபிப்பதன் மூலம் சங்கீதங்களை நம்முடையதாக்கி, நம் ஆன்மீக வாழ்வில் வளர்ந்து, இறை அனுபவத்தில் முதிர்ந்து, கிறிஸ்துவில் முழுமை அடைய வேண்டுமெனத் திருச்சபை விரும்புகிறது. "திருச்சபை நற்கருணைப் பலியை நிறைவேற்றுவதோடு நில்லாமல், பிற வழிகளிலும், சிறப்பாக திருப்புகழ் மாலையைச் செபிப்பதாலும், ஆண்டவரை இடையறாது புகழ்கிறது. உலகம் முழுவதின் மீட்பிற்காகவும் பரிந்து பேசுகிறது" (இறைபணி, 83) என்றும் 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளும் இதற்கு சான்று பகர்கின்றன. திருச்சபையின் வழிகாட்டலின்படி நாம் சங்கீதங்களை செபிக்கும் போது அன்றைய இஸ்ராயேல் மக்களின் வாழ்வோடு இணைந்த இறை அனுபவங்களை நம்முடையதாக்கி, இற்றைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சங்கீதங்கள் அன்றும், இன்றும், என்றும் எம் ஆன்மீக செபவாழ்விற்கு உறுதியும், உரமும், வளமும், வாழ்வும் கொடுக்க வல்லன என்பதை உறுதிப் படுத்துகிறோம். கடந்தகால இஸ்ராயேல் மக்களின் கனவுகளையும், நினைவுகளையும் எமது நடப்பு வாழ்வோடு இணைத்து வழிபாட்டிற்கு உயிரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டமும் கொடுக்கிறோம். சுருங்கச் சொன்னால் சங்கீதங்கள் பழைய இஸ்ராயேல் மக்களையும் புதிய இஸ்ராயேல் மக்களாகிய நம்மையும் இணைக்கும் பாலமாக அமைகின்றன

இலக்கிய மரபுப் பின்னணி

(1) பெயர்: சங்கீதம் என்ற சொல் 'பிசால்மோஸ்' (psalmos) எனும் கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். நரம்புக் கருவிகளின் பின்னிசையில் பாடப்படும் பாக்கள் என இது பொருள்படும். சங்கீதங்களை நாம் திருவிசைப்பா, அருளிசைப்பா, இறை புகழ்ப்பா என்று தமிழ் முறைப்படி அழைக்கலாம்.

(2) ஆசிரியர்: சங்கீதங்களின் ஆசிரியர் தாவீது அரசரே என்று காலாகாலமாக வழங்கப்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம். புதிய ஏற்பாட்டில் இயேசுவும் தாவீதுதான் ஒரு சங்கீதத்தின் ஆசிரியர் என்று குறிப்பிடுகிறார். (மத் 22:43, மாற் 12:35, லூக் 20:42) புனித சின்னப்பரும் தம் திருமுகங்களில் தாவீது சங்கீதங்களின் ஆசிரியர் என குறிப்பிட்டுள்ளார் (உரோ. 4:6, 11:9). பழைய ஏற்பாட்டிலும் பல இடங்களில் தாவீது சங்கீதங்களின் ஆசிரியர் என்ற கருத்தைக் காணக் கூடியதாக இருக்கிறது. சிறப்பாக 2ம் சாமுவேல் 22ம் அதிகாரம் முழுவதும் தாவீது இசைத்த நன்றிப் பாடலாக குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனால் மறைநூல் ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, தாவீதே எல்லாச் சங்கீதங்களினதும் ஆசிரியர் என்பதை நாம் முழுமையாக ஏற்க முடியாது. உதாரணமாக விவிலியத்தின் முதல் ஐந்து புத்தகங்களையும் மோயிசன் எழுதியதாக வழக்கில் இருப்பதை நாம் அறிவோம். ஆனால் மோயிசன் தான் அவற்றை எழுதினார் என நாம் முழுமையாக ஏற்கமுடியாது. அவை பலராலும், பல வேறுபட்ட காலங்களிலும் எழுதப்பட்டன. இருந்தாலும் மோயிசன் இவற்றின் நாயகன் (hero) என்பதாலும், மோயிசனுக்கும் இப்புத்தகங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாலும் மோயிசன் இவற்றின் ஆசிரியர் என வழங்கப்பட்டு வந்திருக்கிறது.

இதே போல்தான் தாவீதும் இசைவல்லுநன் என்பதாலும், சங்கீதங்கள் சிலவற்றின் நாயகன் என்பதாலும் ''சங்கீதங்களின் ஆசிரியர் தாவீதே'' என்று வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இறையியல் ஆராய்ச்சியாளர்கள் தாவீதிற்கும் 73 சங்கீதங்களுக்குமாவது நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென்று எபிரேய மொழி மூலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து கூறுகிறார்கள். இதிலிருந்து தாவீதுதான் எல்லாச் சங்கீதங்களினதும் ஆசிரியர் என்பதை நிரூபிக்கவும் முடியாது.

(3) காலம்: மறையியல் ஆராய்ச்சியாளர்கள் சங்கீதங்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புக்களைக் கொண்டும் இலக்கிய மரபு வழி நின்றும் சில சங்கீதங்களுக்கு உரிய காலத்தைக் கணித்த போதிலும் எல்லா சங்கீதங்களுக்கும் உரிய காலத்தை குறிப்பிட முடியவில்லை. மறைத்திரு தாகுது (M. Dahood) என்பவரின் கருத்துப்படி சில சங்கீதங்கள் பாபிலோனிய அடிமைத்தனக்கு (கி மு. 587) முற்பட்டவை. சில, தாவீதரசன் காலத்தில் எழுதப்பட்டவை. சுருங்கச் சொன்னால் சங்கீதங்கள் காலவரையறையின்றி இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்களும், அனுபவங்களுமே. எனவே இவை எந்த காலத்தைச் சேர்ந்தன என்று திடமாகக் கூறமுடியாது.

(4) இலக்கியப் பாணி: ஹேர்மன் குன்கல் (Herman Gunkel) என்ற ஜேர்மானிய விவிலிய ஆய்வுநர் சங்கீதங்களின் இலக்கியப் பாணி பற்றி ஒரு விரிவான ஆய்வு செய்திருக்கிறார். இவர் முதலில் சங்கீதங்கள் இஸ்ராயேலரின் பழைய திருவிழாக்களின் போது உருவாகி இருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்தார். ஆனால் இவர் பிறகு சங்கீதங்கள் பிற்காலத்தைய திருவிழாக்களின் போது உருவாகி இருக்க வேண்டுமென்று தன் கொள்கையை மாற்றிக் கொண்டார். சங்கீதங்கள் பிற்காலத் திருவிழாக்களைக் குறிப்பிடுவதாலும், சங்கீதங்களில் பிற்கால எபிரேய உரைநடை இருப்பதாலும் சங்கீதங்கள் திருவிழாக்களின் போதுதான் உருவாகி இருக்க வேண்டும். ஆனால் அவை எந்த திருவிழாக்களின் போது உருவாகின என்று திடமாகக் கூறமுடியாது.

இவர் சங்கீதங்களை புகழ்ப்பாக்கள் (hymns), புலம்பல் பாக்கள் (laments), நன்றிப்பாக்கள் (thanksgivings), அரச பாக்கள் (royal psalms) அறிவுரைப் பாக்கள் (wisdom psalms) என 5 வகையாக பிரிக்கிறார்.

1. புகழ்ப் பாக்கள்: இவை படைப்பின் தலைவனும், மீட்பின் இறைவனுமாகிய இஸ்ராயேலரின் கடவுளையும், அவரின் மாண்பினையும் போற்றிப் பாடப்படும் பாடல்கள்.

2. புலம்பற் பாக்கள்: இவை போர், பஞ்சம், கொள்ளை நோய் போன்ற துன்ப நிகழ்ச்சிகளின் போது இறை உதவியை நம்பிக்கையுடன் நாடும் இஸ்ராயேல் மக்களின் குரலாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நன்றிப் பாக்கள்: நாட்டையும், மக்களையும் சகல விதமான தீமைகளில் இருந்தும் காப்பாற்றிய எல்லாம் வல்ல இறைவனுக்கு இறைமக்கள் நன்றியுடன் பாடும் பாடல்.

4. அரச பாக்கள்: இவை அரசனின் மகிமை, அரசனின் வாரிசு என்பன பற்றியும், அரசன் அரியணை ஏறும் விழா என்பவற்றின் போதும் பாடப்படும் பாடல்கள்.

5. அறிவுரைப் பாக்கள்: இவை எப்போதும் அறிவுரை கூறுவது போலவோ, இறைவனின் அறிவுரையைக் கேட்பது போலவோ அமையும்.

சங்கீதங்களின் இறையியல்

சங்கீதங்கள் காலத்தாலும், கருத்தாலும், இலக்கிய அமைப்பு முறையாலும் வேறுபடுவதால் இவற்றின் இறையியலை ஆராய்தல் சற்றுக் கடினமானதாகும். இருந்தாலும் இஸ்ராயேல் மக்களின் மறையனுபவ முதிர்ச்சி சங்கீதங்களில் வெளிப்படுவதாலும், அனைத்து சங்கீதங்களும் ஒரே கடவுளாகிய வரலாற்றின் ஆண்டவரை நோக்கிப் பாடப்பட்டு இருப்பதாலும் இவற்றின் இறையியலை ஓரளவு ஆராயலாம். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள தொடர்பின் மறையனுபவ முதிர்ச்சி இஸ்ராயேலரின் இறையியலாக மலர்கிறது.

(1) கடவுள்: இஸ்ராயேல் மக்கள் தங்கள் கடவுள் ஒப்பாரும் மிக்காரும் அற்ற தலைவன் என்றும், மற்ற சமயக் கடவுளரை விட பலத்தாலும், வல்லமையாலும் பன்மடங்கு உயர்ந்தவன் என்றும் ஓர் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். எனவே அவர்கள் இறைவனைப்பற்றிப் பேசும் போது மனித குணநலன்களையும் பண்புகளையும் (anthropomorphic) கடவுளுக்குக் கொடுத்துப் பேசினர். உதாரணமாக, இறைவன் சிரிப்பார் (2:4) இறைவன் கோபம் கொண்டெழுவார் (17:7) "இறைவா செவிசாயும்" (141:") என்று கடவுளோடு மிக நெருங்கிய மனித முறையிலே உரிமையுடன் உரையாடி உறவு கொள்வார். இவை இஸ்ராயேல் மக்களின் பாவனையில் இருந்து பழக்கப்பட்ட வழக்க முறைகளாகவோ (stereotyped formulae). அல்லது இறைவன் மேல் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையின் ஆழ்ந்த வெளிப்பாடாகவோ இருக்கலாம்.

மேலும் இவர்கள் இறைவனின் அன்பையும், வல்லமையையும், ஆற்றல்களையும் பல கோணங்களில் இருந்தும் தத்ரூபமாக சித்தரித்திருக்கிறார்கள். இவர்கள் தாம் பெற்ற இறை யனுபவத்தில் இருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை வழிமுறையில் இருந்தும் கடவுளை ஓர் இரங்கும் இறைவனாக (135, 144:8–9), மீட்பின் தலைவனாக (67:20, 17:2) வரலாற்றின் நாயகனாக (43:1–3), இயற்கையின் ஆண்டவனாக (23:1, 8:7–8), வாழும் கடவுளாக (83:2, 41:2), தூய்மையின் இருப்பிடமாக (110:9, 98:3–5) படம் பிடித்துக் காட்டுகிறார்கள்.

(2) மனிதன்: மனிதன் ஒன்றுமில்லாமையில் இருந்து உருவாக்கப் பட்டாலும், மகிமையின் உயர் நிலைக்கு உயர்த்தப்பட்டான் என்னும் கருத்து இஸ்ராயேல் மக்களிடம் மேலோங்கி நிற்கிறது. எனவேதான் ''மனிதன் ஒரு மூச்சிற்கு ஒப்பானவன்: அவன் வாழ்நாள் மறைந்து போகும் நிழலை ஒத்தது.'' (143:4) ''மனிதனின் வாழ்நாள் புல்லைப் போன்றது'' (102:15) என்று மனிதனின் ஒன்றுமில்லாமையைப் பாடிய இஸ்ராயேல் மக்கள் ''வானதூதரை விட அவனைச் சிறிது தாழ்ந்தவனாகப் படைத்தீர்; மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர்'' (8:5–6) என்று மனிதனின் மகிமையையும் மாட்சியையும் பாடத்தவறவில்லை.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. தனிமனிதன் சமுதாயத்தில், சமுதாயத்திற்காக வாழவேண்டிய ஒரு பொது உறுப்பினன் எனும் கருத்து இஸ்ராயேல் மக்களின் சங்கீதங்களில் பரவலாகக் காணக்கிடக்கிறது. ''பெருங் கூட்டத்தில் நான் உமக்கு நன்றி செலுத்துவேன். திரளான பொது மக்களிடையே உம்மைப் புகழ்வேன்'' (34:18) போன்ற சங்கீத வாக்கியங்களில் தனிமனிதன் சமுதாயத்தின் ஒரு பொது உறுப்பினன் எனும் கருத்து தெளிவாகிறது.

மனிதன் பாவம் நிறைந்தவன், எனவே அவன் தன் பாவ நிலையை உணர்ந்து, ஏற்றுக் கொண்டு, மனம் திருந்தி நீதிமானாக முயல வேண்டுமென்ற கருத்தும் இஸ்ராயேல் மக்களிடம் காணப்படுகிறது. எனவேதான் ''உமக்கெதிராக மட்டுமே பாவம் செய்தேன். உம் திரு முன்னிலையிலேயே செய்தேன்'' (50:3–5) என்று பாவத்தை ஏற்று மனம் வருந்துவதையும், ''ஆண்டவரே உம் இல்லத்தில் தங்கி வாழ்வோன் யார்'' (14:1) என்று நீதிமானாகிட ஏங்குவதையும் காண்கிறோம்.

அரசர்கள் தங்களுக்குக் கீழ் உள்ள சிற்றரசர்களுடன் கொண்டிருந்த உறவு இஸ்ராயேல் மக்களுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது. பேரரசனும் சிற்றரசனும் செய்து கொள்ளும் உடன்படிக்கையை அவர்கள் விசுவாசத்துடன் கடைப்பிடிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ராயேல் மக்களை என்றும் கைவிடாத இறைவனின் நிலை பெயரா அன்பை 'உடன்படிக்கைக்கு' ஒப்பிடுவதை நாம் சங்கீதங்களில் காணலாம்.

இன்றைய வழிபாட்டில் சங்கீதங்கள்

இறைவனோடு உறவாடி, உரையாடி, ஓர் உயர்ந்த நிலையை அடையவும், தன் தேவைகளை கேட்கவும், கிடைத்த உதவிக்கு நன்றி செலுத்தவும் மனிதன் கடவுள்பால் தன் உள்ளத்தை எழுப்புதலே செபமாகும். உண்மையின் உயர்ந்த செபம் உள்ளத்தாலும், செயலாலும் ஒன்றுபட்டு இறைவனை நோக்கி எழும்ப வேண்டும். வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒருவன் தன் உண்மை நிலையை உணர்ந்து, ஏற்றுக்கொண்டு இறைவனிடம் உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையில் இறை உதவியை நாடுவதே செபம். சங்கீதங்கள் இந்த எல்லாப் பண்புகளையும் தம்முள் கொண்டு எந்தச் சந்தர்ப்பத்திலும் செபிக்கக் கூடிய ஒரு சிறந்த உயர்ந்த செபமாக விளங்குகிறது. "கிறிஸ்தவ விசுவாசிகள் சங்கீதங்களை முறையாகச் செபிக்கும் போது அது உண்மையாகவே கிறிஸ்துவுடன் உரையாடும் திருச்சபையின் செபமாகிறது. ஏன் கிறிஸ்துவே தந்தையை நோக்கிச் சொல்லும் செபமாக அமைகிறது" என்று வத்திக்கான் சங்க ஏடுகளும் இக் கருத்தை வலியுறுத்துகின்றன (இறைபணி, 84). இஸ்ராயேல் மக்கள், தம்மை ஒரு தனி இனமாகத் தேர்ந்தெடுத்த இறைவனுடன் கொண்டிருந்த உறவின் தொடர்புதான் சங்கீதங்களாக மலர்ந்தது. எனவே புதிய இஸ்ராயேல் இனமாக விளங்கும் நாம் நமது முன்னோரின் செப சங்கீதங்களை எமது வழிபாட்டிலும் புகுத்திச் செபிக்க உரிமையும் கடமையும் கொண்டுள்ளோம்.

சங்கீதங்கள் நமது சமுதாயத்திற்கு ஒவ்வாதன என்றும் அவை பழையன என்றும் நாம் அவற்றை அறியாதிருந்த காலம் மறைந்து விட்டது. 2ம் வத்திக்கான் சங்கத்தால் இறை வழிபாட்டில் விவிலியம் ஒரு முக்கிய இடத்தை அடைந்ததுடன் சங்கீதங்களும் முக்கியத்துவம் அடையத் தொடங்கி விட்டன. இதற்காக நாம் இரு காரணங்களைத் தரலாம். முதலாவதாக, பழைய ஏற்பாடு முழுவதும் இஸ்ராயேல் மக்களையும் அவர்களின் கடவுளையும் பற்றியது. சங்கிதங்கள் முழுவதும் இஸ்ராயேல் மக்களையும் அவர்களின் கடவுளையும் பற்றிக்கூறுவதால் சங்கிதங்கள் "ஒருபழைய ஏற்பாடாக" தனித்து நிற்கின்றன. இரண்டவதாக, புதியஏற்பாடும் 93 இடங்களில் 60 சங்கீதங்களை ஆதாரம் காட்டுகிறது. எனவே சங்கிதங்கள் தனித்து கடவுளின் வார்த்தையாக நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தமிழ்ச் சமுதாயம் பழமையைப் பேணிப்பாதுகாப்பதில் பெயர் போனது. ஆனால் பழைய சங்கீதங்களைப் பேணி, அவற்றை நமது வழிபாடுகளில் பயன் படுத்துவதில் அவ்வளவு ஊக்கம் காட்டாது புதுமையை மட்டும் நாடிப் போவது வருந்தத்தக்க விடயமாகும். சங்கீதங்களையும், அவற்றின் முக்கியத்துவத்தையும், அவற்றின் பின்னணியையும் அவற்றைப் பாவிக்கும் விதத்தையும் அறியாதிருத்தல் புதுமையை மட்டும் நாடிப் போவதற்கு ஒரு காரணமாகும். சங்கீதங்களின் முக்கியத்துவத்தையும் பின்னணியையும் ஏற்கனவே ஆராய்ந்தோம். இப்போது எவ்வாறு சங்கீதங்களை எமது அன்றாட வாழ்வோடு தொடர்பு படுத்திப் பயன் படுத்தலாம் என்பது பற்றிப் பார்ப்போம். சங்கீதங்களைச் செபிப்பதற்கு அவை எமது சொந்த அனுபவங்களாக வேண்டும். இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சங்கீதங்கள் எமது சொந்த அனுபவங்களாக இல்லாவிடினும், அவற்றை நமது அனுபவங்களாக்கி வாழ்வோடு இரண்டறக் கலக்க வேண்டும். உதாரணமாக, கடவுளை மகிழ்ச்சியால் புகழும் போது புகழ்ப் பாக்களையும்; கவலையாய் இருக்கும் போதும், கடவுளின் உதவியை நாடும் போதும் புலம்பற்பாக்களையும்; கடவுளுக்கு நன்றி செலுத்தும் போது நன்றிப்பாக்களையும் பயன் படுத்தலாம். இவ்வாறு செபிக்கும் போது ஒவ்வொரு சங்கீதமும் ஒவ்வொருவரின் சொந்த வாழ்வின் அடிப்படையில் தனி விளக்கம் பெறும்.

சங்கீதங்களைச் செபிக்கும் போது, இது எவ்வகையில் என் வாழ்க்கையைத் தொடுகிறது? எனக்கும் இந்த சங்கீதத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? இது எனக்கு என்ன புதிய பாடத்தையும் அறிவுரையையும் புகட்டுகிறது? இந்தச் சங்கீதத்தில் எனக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பு எவ்வகையில் அமைந்துள்ளது? போன்ற கேள்விகளை எழுப்பி என் செப வாழ்வில் அவற்றிற்கு விடை காண முயல வேண்டும்.

மேலும் இன்று திருவழிபாடுகளில் இசையும், இனிமையும், புதுமையும் நிறைந்த புதிய பாடல்கள் பயன் படுத்தப்படுவதால் சங்கீதங்களிலும் பார்க்க அவற்றிற்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. இதனால் திருவழிபாடுகளில் கருத்தும், பொருத்தமும் அற்ற பாடல்கள் பல முறைகளில் பயன் படுத்தப்படுகின்றன. எனவே சங்கீதங்களுக்கும் இனிமையான இசையமைத்து திருப்பலி ஆரம்பத்திலும் தியானப் பாடலாகவும், பதில் பாடலாகவும், நற்கருணை உட்கொண்ட பின்பும் சமயத்திற்கேற்ப பொருத்தமாகப் பயன் படுத்தலாம். சங்கீதங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபங்களுக்கிடையில் பாவிக்கப்பட வேண்டிய பல்லவிகள் அல்ல. மாருக சங்கீதங்கள் தம்மிலேயே நிறைவான ஒரு தனிச் செபமாக விளங்குகின்றன. எனவே தியானங்களிலும், குடும்பச் செபங்களிலும், குழுச்செபங்களிலும் இறை வார்த்தையான சங்கீதங்களை இன்னும் அதிகமாகப் பயன் படுத்துவதால் அவற்றிற்குக் கருத்தும், உயிரும் மெருகுமூட்டலாம்.

முடிவுரை

நற்செய்தி ஏடுகளைப்புரட்டும் போது இயேசுவும் சங்கீதங்களைச் செபித்ததாக அறிகிறோம். உதாரணமாக ''தந்தையே உமது கைகளில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன்'' (லூக் 23:46—சங். 30:5) ''கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக்கல்லாய் அமைந்தது'' (மத் 21:42—சங் 117:22—23). இவ்வாறு யேசுவும் சங்கீதங்களில் செபித்து, நாமும் சங்கீதங்களில் செபிக்க வேண்டுமெனச் சொல்லாமல் சொல்லி இருக்கிறார். மேலும் திருச்சபையின் தந்தையரான அம்புரோசு, அகுஸ்தீன் இரேனியுசு, தெர்த்துல்லியன், யுஸ்தின் முதலியோரும் நாம் சங்கீதங்களை எமது வாழ்வில் பயன்படுத்திப் பயன்பெற வேண்டுமென விரும்புகிறார்கள். ''சங்கீதங்கள் கிறிஸ்தவப் பொருளுடையன. அவற்றை ஏனோதானோ என்ற முறையில் விட்டுவிடாது அன்றாட வாழ்வில் பயன்படுத்திப் பயன் பெறுவோம்'' என்று, கர்தினல் நியூமன் அடிகளாரும் சங்கீதங்களில் கிறிஸ்துவை விளங்கி கிறிஸ்துவில் முழுமை அடைய நம்மை அழைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளப்பரின் நற்செய்தியில் கிறிஸ்து

— ஏ, இ. ஜீவரத்தினம் —

அநேக கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டில் புனித அருளப்பரின் நற்செய்தியை மிகவும் அரியதாகவும், பெருமதி மிக்கதாகவும் கருதுகின்றனர். இந்த நற்செய்தி சிலருக்கு விருந்தாகவும் மற்றும் சிலருக்கு மருந்தாகவும் இருந்து பணிபுரிகின்றது. புதிய ஏற்பாட்டின் மற்றைய நற்செய்தி அறிவிப்பாளருடன் புனித அருளப்பரின் நற்செய்தியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது புனித அருளப்பரின் நற்செய்தியானது நித்திய உண்மைகளையும், நித்திய மறைபொருட்களையும் மிகவும் கூர்ந்து, உன்னிப்பாக அவதானித்து எழுதப்பட்டுள்ள உண்மை புலனாகும். இவ்வுண்மையை மனதிற் கொண்டுதான் நற்செய்தி அறிப்பாளருக்கு கொடுக்கப்பட்ட அடையாளங்களில் புனித அருளப்பருக்கு கழுகு அடையாளமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் பொருத்தமானதொன்று. ஏனெனில் உயிர் வாழ்வன அனைத்திலும் இப்பறவைக்கே வைத்த கண் வாங்காமல் இமைகளை மூடாமல் பிரகாசமான சூரியனைப் பார்க்கமுடியும்.

புனித அருளப்பர் தமது நற்செய்தியில் முக்கியமாக, கடவுளின் வார்த்தை மனுவுருவாகி மக்களுடன் தொடர்பு கொண்டதையும் மக்கள் நித்திய வாழ்வு பெறவேண்டிய வழிகளையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். கடவுளின் வார்த்தையாகிய இயேசு போதித்த உயர்ந்த உண்மைகளை விபரிக்கும் புனித அருளப்பர், அவ்வுண்மைகளோடு தமது முதிர்ந்த இறையியல் கருத்துக்களையும் அடக்கிக் கொடுக்கின்றார். தம் ஆழ்ந்த சிந்தனையாலும் நீண்ட தியானத்தினாலும் கிறிஸ்துவின் போதனைக்கு மெருகு ஊட்டுகின்றார்.

புனித அருளப்பரின் நற்செய்தியில் கிறிஸ்து தம்மை வெளிப்படுத்துவதில் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால், கிறிஸ்து தன்னைத் தானே உரிமையுடனும், ஆணித்தரமாகவும் 'நானே...' ('I ma...' formula) என்று அடிக்கடி கூறுவதாகும். இவ்வாறு கிறிஸ்து 'நானே...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுவது பழைய ஏற்பாட்டில் கடவுள் தன்னை 'நானே கடவுள்' (இசையாஸ் 43 : 13, உப ஆகமம் 32 : 39) என்று கூறுவதின் தொடர்ச்சியாகும். இவ்வாறு அநேக பழைய ஏற்பாட்டு அடையாளங்களும், சின்னங்களும், குறியீடுகளும், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவையே குறித்துக்காட்டுவதாக புனித அருளப்பர் கையாண்டிருக்கும் விதம் குறிப்பிடத் தக்கதாகும்.

1. நானே வாழ்வு தரும் அப்பம் (6:35, 41, 48)
2. நானே உலகின் ஒளி (8:12, 9:5)
3. நானே வாயில் (10:7–9)
4. நானே நல்லாயன் (10:11–14)
5. நானே உயிர்ப்பும் உத்தானமும் (11:25)
6. நானே வழியும், உண்மையும், வாழ்வும் (14:5)
7. நானே உண்மையான திராட்சைக்கொடி (15:1–5)

நானே வாழ்வு தரும் அப்பம்

முற்காலத்தில் யூதர்களின் சட்டதிட்டங்களுக்கு அப்பம் ஓர் அடையாளமாக இருந்தது. சட்டதிட்டங்களை ஒழுங்காகவும் நுணுக்கமாகவும் கடைப்பிடிப்பதனால் மாத்திரம் சீரான வாழ்க்கை வாழ முடியும் என்று எண்ணினார்கள் யூதர்கள். சட்டதிட்டங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தும் அதற்கே அடிமையாகவும் இருந்தனர். ஆனால் கிறிஸ்து அதைமாற்றி "நானே வாழ்வு தரும் அப்பம்" என்று கூறி தன்னைப் பின்பற்றுபவன் நித்திய வாழ்வைப் பெறுவான் என்று கூறுகின்றார்.

மோயிசன் காலத்தில் இறைவன் யூதர்களுக்கு மன்னாவைக் கொடுத்தார். அதேபோல் கிறிஸ்து அப்பத்தை அடையாளமாகப் பலுகச் செய்து "நானே வானத்தில் இருந்து வந்த உயிரளிக்கும் உணவு" என்று கூறி நித்திய வாழ்வுபெற தன்னிடம் வரும்படி அழைக்கின்றார். இவ்வாறு கிறிஸ்து கூறுவதன் மூலம் அவர் தன்னைத் தானே மக்களுக்காக அளிக்க முன்வருகிறார் இது அவரது பாடுகளினாலும் உயிர்ப்பினாலும் நிறைவு பெறுகின்றது.

நானே வாழ்வின் ஒளி

யூதர்களின் மத்தியில் 'ஒளி' என்பதும் சட்டதிட்டங்களுக்கு ஓர் அடையாளமாகத்தான் இருந்தது (சங். 119:105). சட்டதிட்டங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காகக் கடைப்பிடிப்போர் ஒளியைப் பின்பற்றுவதாகக் கருதினர்கள். ஆனால் இயேசு பழைய ஏற்பாட்டைப் பூர்த்தி செய்து " நானே வாழ்வின் ஒளி " என்று கூறுகின்றார். நான் இவ்வுலகிற்கு ஒளியாய் இருந்து தீர்ப்பிடுவதற்காகவே வந்துள்ளேன் என்று கூறுகின்றார்.

ஒளி உலகிற்கு வந்துள்ளது; மனிதர்களோ ஒளியைவிட இருளையே விரும்பினர். ஏனெனில் அவர்களுடைய செயல்கள் தீயனவாயிருந்தன. பொல்லாதது செய்பவன் எவனும் ஒளியை வெறுக்கிறான். தன் செயல்கள் தவறானவை என்று வெளியாகாதபடி அவன் ஒளியிடம் வருவதில்லை (அரு. 3: 19—21).

நானே வாயில் (வழி)

கிறிஸ்து " நானே வாயில் நானே வழி " என்று கூறி கடவுளுக்கும் தனக்கும் உள்ள மிக நெருங்கிய உறவை எடுத்துக் காட்டுகின்றார். தன் மூலமாக மட்டுமே கடவுளை அறியவும், அடையவும் முடியும் என்று கிறிஸ்து ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகின்றார். ஏனெனில் கிறிஸ்து கடவுளிடமிருந்தே வந்தவர்.

கிறிஸ்து நல்வாழ்க்கைக்கு வாயிலாகவும் கடவுளை அடைவதற்கு வழியாகவும் அமைகின்றார். இந்த வாயிலை மற்றைய வாயில்களைப் போல் நாம் எமது இலக்கை அடைந்தவுடன் ஒதுக்கி வைத்துவிட முடியாது. ஏனெனில் கிறிஸ்துவே உண்மையாகவும் இருக்கின்ற படியால் அதே வாயில் மூலமாகச் சென்று வந்தால்தான் உண்மையை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு கிறிஸ்துவே வாயிலாகவும், வழியாகவும், உண்மையாகவும் இருந்து நாம் கடவுளை அடைவதற்கு வேண்டிய வழிவகைகளைக் காண்பிக்கின்றார். இவற்றின் மூலம் எமக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ள உறவு பலப்பட்டு விரிவடையும்.

நானே நல்லாயன்

யூதர்கள் ' ஆயன் ' என்ற அடையாளம் மூலமாக கடவுளையும் மற்றும் தலைவர்களையும் எளிதில் புரிந்துகொண்டார்கள். இக்கருத்துச் செறிந்த அடையாளத்தைக் கிறிஸ்து தனதாக்கி " நானே நல்லாயன் " என்று கூறுகின்றார்.

ஓர் ஆயன் தனது மந்தையை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாத்து, பசும்புல் உள்ள இடத்திற்கு அழைத்துச்சென்று, பின் குளிர்

3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் ஓடைக்கு நடத்திச்சென்று, இரவு நேரங்களில் விழித்திருந்து கள்வரிடமிருந்து காப்பான்.

இதேபோலத்தான் கிறிஸ்துவும் தமது மந்தையாகிய எம்மைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வருகின்றார். இதைக் கிறிஸ்து பின்வரும் வாக்கியங்களில் மிகவும் அழகாகக் கூறுகின்றார் :

> கூலிக்கு மேய்ப்பவன் ஆடுகளை சொந்தமாகக் கொண்டுள்ள ஆயனுயிராததால் ஓநாய் வருவதைக்கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப்போகிறான். நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிவது போலவும் நான் தந்தையை அறிவது போலவும் என் ஆடுகளை நான் அறிவேன்.

மீண்டும் கிறிஸ்து "நல்ல ஆயன் நானே. நல்லாயன் ஆடுகளுக்காகத் தன்னுயிரையே கொடுப்பான்" என்று கூறி எமக்காகத் தன் உயிரையே கொடுத்தார். இதன் மூலம் கிறிஸ்து எம்மேல் கொண்ட அன்பு வெளிப்படுகின்றது.

நானே உண்மையான திராட்சைக்கொடி

பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் இனம் கடவுளின் திராட்சைக் கொடி என அழைக்கப்பட்டது. பின்னர் அக்கருத்து சிறிது மாற்றமடைந்து யூதர்களது மீட்பருக்கும், சட்ட திட்டங்களுக்கும் அடையாளமாகக் கூறப்பட்டது. ஆனால் கிறிஸ்து பழைய ஏற்பாட்டை நிறைவு செய்யும் பொருட்டு "நானே உண்மையான திராட்சைக் கொடி" என்கின்றார். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் நிச்சயமாக கிறிஸ்துவில் தான் நிலைத்திருக்க வேண்டும். மாறாக மற்றும் சட்ட திட்டங்களிலும், கொள்கைகளிலும் நிலைத்திருந்தால் நிச்சயமாக கனி கொடுக்க முடியாது.

> நான் உங்களில் நிலைத்திருப்பதைப்போல் நீங்களும் என்னில் நிலைத்திருங்கள். கிளையானது திராட்சைக் கொடியில் நிலைத்திருந்தாலன்றி தானாகக் கனி தர முடியாது.

கிறிஸ்து உலகிற்கு வந்து, நாம் அனைவரும் அவரில் நிலைத்திருக்கும்படியும், அவ்வாறு இருந்தால் நிச்சயமாகக் கனி கொடுக்கலாம் என்றும் கூறி அதற்காகவே தம்மையும் அளித்துச் சென்றிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே உயிர்ப்பும் உயிரும் (11 : 25. 14 : 6)

கிறிஸ்து தம் இவ்வுலக வாழ்க்கையில் மரணத்தை வென்றவர். மரணத்தின் மூலம் மனிதனது வாழ்க்கை முற்றாக முடிவு பெறவில்லை, மாறாக அது இன்னொரு வாழ்க்கையின் ஆரம்பம் என்பதை உணர்த்தினார்.

கிறிஸ்துவின் இந்த உயிர்ப்புத்தான் விசுவாசிகளாகிய எமக்கு, எமது உயிர்ப்புக்கு ஒரு முன் அடையாளமாகவும் உறுதியாகவும் இருக்கின்றது. இவ்வுலக வாழ்க்கையோடு மனிதனின் வாழ்வு முடிவு பெறுவதில்லை; மாறாக அதற்குமேல் ஓர் உன்னத வாழ்வு உண்டென்று உணர்த்தியவர் இயேசு. இவ்வாறு எமது வாழ்க்கைக்கு ஓர் உயர்ந்த நோக்கத்தைக் கொடுத்தவர் இயேசு,

நானே உண்மை (14 : 16)

வெறும் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதுதான் உண்மையான வாழ்க்கை என்று யூதர்கள் எண்ணினார்கள். ஆனால் கிறிஸ்து ''நானே உண்மை'' என்று கூறி தன்னைப் பின்பற்றுபவன் எவனும் அவனது வாழ்க்கையை இழந்துபோக மாட்டான் என்று கூறுகின்றார். கிறிஸ்து தன்னை உண்மை என்று கூறுவதன் மூலம் அவர் கடவுளின் வார்த்தை என்பது வலியுறுத்தப்படுகின்றது. கிறிஸ்து தான் உண்மை. அவர் கடவுளிடம் இருந்து பேசும் வார்த்தைதான் உண்மை.

இவ்வாறு கிறிஸ்து தன்னைப் பலவிதமாக வெளிப்படுத்துவதன் மூலம் தமது தந்தையாகிய கடவுளை முழுமையாக வெளிப்படுத்துகின்றார். கடவுள் இரக்கம் மிகுந்தவர், பாசம் மிக்கவர், நம் அனைவர் மேலும் எல்லையற்ற அன்பு கொண்டவர் என்ற உண்மைகளை கிறிஸ்துவின் மூலமாக அறிய முடிகின்றது. இத்தகைய ஒரு தந்தையைக் கிறிஸ்து எமக்கு வெளிப்படுத்தி அவரை எவ்வாறு அடைவது என்றும் எமக்குக் கூறியிருக்கின்றார். இவ்வாறு கிறிஸ்து கடவுளுக்கும், எமக்கும் இடையே ஓர் உறவை ஏற்படுத்தி ஒரு பாலமாக அமைகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையில் புனிதர்கள்

— ய. தேவசகாயம் —

முன்னுரை

புனிதர்களின் வணக்கம் திருச்சபையின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது. இவ்வாறு புனிதர்களுக்கு நாம் கொடுக்கும் வணக்கமும் முக்கியத்துவமும் பலருக்கு ஆச்சரியமாகவும் கேள்விக்குறியாகவும் மாறிவருகின்றது. ஒரே கடவுள் என்று பெருமைப் படுபவர்கள், மண்ணகத்தில் வாழ்ந்தவர்களையெல்லாம் கடவுளாக வணங்குகின்றார்களே? "நாமே ஒரே கடவுள்; வேறு கடவுள் உனக்கு இல்லாமல் போவதாக" என்ற இறைவனின் வார்த்தையைத் தட்டிக் கழித்து வாழ்ந்துகொண் டிருக்கிறார்களே? என்று கிறிஸ்தவர்களைப் பார்த்துப் பலர் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றார்கள். இந் நிலையில்தான் எமது பிரிவினைச் சகோதரர் (Protestants) புனிதர்களே வேண்டாம்; இறைவன் ஒருவனே எமது மீட்பிற்குப் போதும்; எமது வாழ்க்கைக்கு மெருகூட்ட, அதைப் புனிதமாக்க அவர் துணையே போதும்; அவர் வாரிவழங்கும் அன்பினாலேயே இவ்வுலகையும் எம்மையும் இணைத்த உலகைப் புனிதமயமாக்கி விடலாம் என்று கூறுவது ஓரளவு சரியாகத் தோன்றுகின்றது. இவைக்கு மத்தியில் கிறிஸ்தவர்களாகிய எமது நிலை என்ன? நாம் எந்த ரீதியில் புனிதர்களை அணுகுகின்றோம்? புனிதர்களின் வணக்கம் எமது வாழ்வில் என்ன கிறிஸ்தவப் பண்புகளை வளர்க்க உதவுகின்றது? என்ன மாற்றங்களை ஏற்படுத்துகின்றது? அல்லது புனிதர்கள் வணக்கத்தை முற்றாக உதறித் தள்ளிவிடுவோமா? போன்ற பல கேள்விகள் எம்மில் எழுவது இயற்கை.

புனிதர்கள் யார்?

புனிதர்கள் யார் என்பதற்குப் பல விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. விவிலியத்தில் புனித இராயப்பர் தமது மடலில் (1 இரா. 2 : 9) விசுவாசத்தினாலும், திரு முழுக்கினாலும் திருச்சபையின் உறுப்பினராகியோர் அனைவரும், "தேர்ந்தெடுக்கப்பட்ட இனம்; அரச குருத்துவத் திருக்கூட்டம்" — அனைவரும் இறைவனின் அழைத்தலை ஏற்று புனிதத் தன்மைக்கு அழைக்கப் பட்டிருக்கிறார்கள் என்று கூறுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளர். புனித சின்னப்பரும் தமது வாசகர்களை எல்லாம் புனிதர்கள் என்று அழைத்து, அவர்கள் உயர் பண்புகளை வாழ்வில் அணிந்து இறைவனுக்கெதிராக இயங்கும் உலக சக்திகளையெல்லாம் வெறுத்து ஒதுக்கும்படி தூண்டுகின்ருர் (1 கொரி. 6 : 9).

சரித்திர ஏட்டைப் புரட்டிப் பார்க்கும்போது இறைவனுடைய வார்த்தைக்குச் செவிமடுத்து, தூய ஆவியின் வழி நடத்துதலுக்குத் தம்மை அர்ப்பணித்து, திருமுழுக்குப்பெற்ற அநேகர் பெறமுடியாத பெரும் பாக்கியத்தைச் சிலர் பெற்றிருக்கின்ருர்கள். அவர்களைத் திருச்சபை புனிதர் பட்டியலில் சேர்த்து அவர்கள் வாழ்க்கை எமக்கு மாதிரியாக (models) அமையவேண்டும் என்று கேட்கின்றது. அவர்கள் ஏற்கனவே நித்திய இன்பத்தை அனுபவிக்கிருர்கள் என்றும் அவர்களைப் பின்பற்றி பாவத்தை எதிர்த்து, பலவீனங்களை மேற்கொண்டு, கிறிஸ்தவத்தின் முழுமையை அனுபவிக்க வேண்டுகோள் விடுக்கின்றது. திருச்சபை அவ்வாறு எம்மைத் தூண்டும்போது, இறைவன் புனிதர்களுக்குச் செய்த அளப்பரிய நன்மைகளை மட்டும் எண்ணி மயங்கிவிடக்கூடாது. அவர்களை வாழ்வின் தகுந்த முன்மாதிரிகளாக நமது வாழ்வில் பிரதிபலிக்க வேண்டுகின்றது (2-ம் வத்திக்கான் சங்கம், இறைபணி, எண் 111). கிறிஸ்தவப் புனிதத்தன்மை என்ன என்பதை அவர்கள் வெளிப்படுத்துவதால், புனிதர்கள் இறைமகன் இயேசுவின் திரு வதனத்தைப் பிரதிபலிப்பவர்களாவர் எனச் சுட்டிக்காட்டுகின்றது (திருச்சபை, எண் 50). எனவே புனிதத்தன்மை இறைவனைப் பின்பற்றுவதன்மூலம் பெற வேண்டியதொன்று.

புனிதர்கள் பலவிதம்

புனிதர்கள் மத்தியில் பலவிதமான தன்மைகளை, பண்புகளைக் காண்கின்ருேம். இயேசுவின் வாழ்வில் வெளிக்கொணரப்பட்ட வெவ்வேறு பண்புகளை அல்லது இறை வார்த்தை ஊக்குவிக்கும் பண்புகளை தமது வாழ்வின் தாரக மந்திரங்களாகக் கொண்டு வாழ்வை வளம்படுத்தினர்கள் புனிதர்கள். இறைவார்த்தையை மக்களுக்கு எடுத்துரைப்பதில் வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள்; இறைமகனுக்குச் சாட்சி பகருவதே தமது ஆவல் என்று துன்பங்களை, ஏன் உயிரையே துச்சமென மதித்தவர்கள்; தாழ்மையை, வறுமையை அணிகலன்களாகக் கொண்டு வாழ்ந்தவர்கள்; மக்கள் சேவையே மகேசன் சேவையென்று தம் முழு வாழ்வையும் துன்பப்படும், வறுமையில் வாடும் மானிடருக்காக அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள்: இப்படி பலரகம். எப்படியும் வாழலாம் என்பதை மறுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்று எடுத்துக் காட்டியவர்கள் எமக்கு முன்மாதிரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால மகிமைக்கு ஒளி காட்டிகள்

புனிதர்கள் ஏற்கனவே இறைவனது பிரசன்னத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த உண்மை, நாமும் ஒருநாள் இறைவனது சந்நிதானத்தை நேருக்குநேர் உணரப்போகின்றோம் என்பதைச் சந்தேகமின்றி நினைவூட்டுகிறது. வத்திக்கான் சங்கம் " இறைவனைப் பின்பற்றிய புனிதர்களின் வாழ்வை நாம் நோக்கும்போது இறைவனது நகரை நாம் நாடவேண்டிய காரணம் தெளிவாகின்றது " என்றவாறு கூறுகின்றது (திருச்சபை, எண் 50). அவர்கள் விண்ணகத்தில் பாடும் ஆனந்த ராகம், நாமும் யாத்திரிகர்கள், எமக்கும் விண்ணக ஒளி காத்துக்கொண்டிருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது. மீட்புக்கு எதிராக இருந்த தடைகளின்மீது அவர்கள் கொண்ட வெற்றி, நாமும் பாவத்தையும் பலவீனத்தையும் எதிர்க்க முடியும், வெற்றிவாகை சூட முடியும் எனக் கூறுகின்றது. " இம்மைக்காலத்தில் நாம்படும் துன்பங்கள் நம்மிடம் வெளிப்படப்போகின்ற மகிமையோடு ஒப்பிடவும் தகுதியற்றவை " (உரோ. 8 : 18). " புனிதமிக்க மரியாள், அப்போஸ்தலர், புனிதர்களுடன் எம்மையும் விண்ணக மகிமையில் பங்குகொள்ளச் செய்தருளும் '' என்று நற்கருணைச் (eucharistic prayer) செபத்தில் நாம் கூறுவது எத்துணை கருத்துமிக்கது! எனவே புனிதர்களை வணங்குவது காலங் கடந்தவர்களைப் புகழ்வது மட்டுமல்ல, அவர்களிடமிருந்து படிப்பினைகளைக் கற்றுக்கொள்வது மட்டுமல்ல, எதிர்கால மகிமையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கவும் செய்கின்றது.

புனிதன் ஒருவன்

புனிதர்களைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டியவர்கள் முதலில் புனிதர்களின் முதல்வனை மறந்துவிட முடியாது. உண்மையாகப் புனிதன், தூயவன் ஒருவனே — அவன்தான் இயேசு. நாம் " புனிதர்கள் " என்று அழைப்பவர்கள் இயேசுவின் இந்தப் புனிதத்தன்மையில் பங்கு கொண்டவர்கள். இயேசுவின் புனிதத் தன்மையால் உயிரூட்டப்பட்டு, தங்களுடைய இடத்தில், காலத்தில், சமூக அமைப்பில் இயேசு எவ்வாறு வாழ்ந்திருப்பாரோ அவ்வாறு வாழத் துடித்தவர்கள்.

மறைந்துள்ள புனிதர்கள் (hidden saints)

புனிதர்களின் பட்டியலில் சேர்ந்தவர்கள்தான் புனிதர்கள், அல்லது ஏதோ சில புதுமைகளைச் செய்து மக்களால் போற்றப்படுபவர்கள்தான் புனிதர்கள் என்றில்லை. வரலாற்றுத் தொடக்கமுதல் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை எத்தனையோ இனங்காணப்படாத புனிதர்கள் இறைவனுடைய சந்நிதானத்தில் மகிமையடைகின்றார்கள். அவர்களை நாம் "மறைந்துள்ள புனிதர்கள்" என்று அழைக்கின்றோம். உள்ளத்தினால் இறைமகனுடன் இணைந்து வாழ்ந்தவர்கள், அன்புப் பெருக்கினால் நாட்டைக் காப்பாற்றத் துடித்தவர்கள், சுயநலமற்ற தன்மையால் நன்மைசெய்யத் துடித்தவர்கள், செபத்தினால் மற்றவர்களுடைய வாழ்க்கையை வசந்தமாக்கிட விளைந்தவர்கள் பலர் இன்னும் மறைந்த புனிதர்களாகவே இருக்கின்றனர். அவர்களும் புனிதர்கள்தான். சிலவேளைகளில் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புனிதர்களைவிட எத்தனையோ மடங்கு சிறந்த புனிதர்கள் வாழ்ந்திருக்க முடியும். துரதிர்ஷ்டவசமாக அவர்களைப்பற்றி எம்மால் எதுவும் அறியமுடியாமல் இருக்கின்றது. சரித்திர அடிப்படையில்லாத புனிதர்களை வணங்கும்படி திருச்சபை கேட்பதில்லை.

பக்திமுயற்சியும் (devotion) வழிபாடும் (worship)

பலவேளைகளில் பக்திமுயற்சிக்கும், வழிபாட்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளாமல் இறைவனைவிட புனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். இறைவன்தான் எம்மைப் படைத்தவன், காக்கின்றவன், எம்மோடு உறைகின்றவன், எல்லாவற்றையும் கடந்தவன். அவனை நாம் வழிபடவேண்டும். புனிதர்கள் படைக்கப்பட்டவர்கள், குறையுடையவர்கள். அவர்களை நாம் வணங்க வேண்டும். படைத்தவனை மறந்து படைக்கப்பட்ட புனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பெரிய பாவம். அல்லது இறைவன் எம்மையெல்லாம் கடந்தவன், அவனை நாம் இலகுவில் அணுகமுடியாது என்று எண்ணி, புனிதர்கள் மூலம் அவனை அடைய முயல்பவர் பலர். புனிதர்கள் எமக்கும் இறைவனுக்கும் இடையே பரிந்துபேசுபவர்கள் (mediators) என்பது எல்லாம் காலம்கடந்த கோட்பாடுகள். இறைமகன் இயேசுதான் இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே பரிந்து பேசுபவர். வேறு எவரும் அவரது இடத்தைப் பிடிக்கமுடியாது.

இறைவனை நாம் இலகுவில் அணுகுவதற்காகத்தான் அவர் மனு உரு எடுத்து எம்மைப்போல் ஒருவராக (பாவம் தவிர) வாழ்ந்தார். முழு மனிதனாக வாழ்ந்தார். எமது அபிலாசைகள், ஏக்கங்கள், துன்ப நிலைகள் எல்லாம் அவர் அறிவார். மனிதன் என்பதைவிட, இறைவன் என்ற ரீதியில் எல்லாம் தெரிந்தவர். எனவே, இறைவன் எமக்கு எட்டாத தூரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார் என்பதை விடுத்து, அவர் எம்முடன் இரண்டறக் கலந்துள்ளார் என்பதை நாம் கருத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்றவேண்டும். இயற்கையின் வனப்பிலே இறைவன், அயலவரில் இறைவன், எமது உள்ளக் கமலங்களில் இறைவன்! எவ்வாறு பாரதி கண்ணனை நண்பனாக, ஆசிரியனாக, வேலையாளாக, தீராத விளையாட்டுப் பிள்ளையாகப் பாடினானோ அவ்வாறே நாமும் இறைவனை நண்பனாக, ஆசிரியனாக, ஏன் வழிபடக்கூடாது? கடவுள் — அனைத்தையும் கடந்தவர். எம்முள்ளே வாழ்கின்றார்.

இயேசு ஒருவர்தான் பரிந்துபேசுபவர்; ஆனால், புனிதர்களின் பரிந்துபேசும் தன்மை இயேசுவினது பரிந்துபேசும் தன்மையை எவ்விதத்திலும் குறைக்கவில்லை (I அரு. 2 : 2). எவ்வாறு பொதுநிலையினரின் குருத்துவம் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கு கொள்கின்றதோ, அதேபோன்று புனிதர்களின் பரிந்துபேசும் தன்மை இயேசுவின் பரிந்துபேசும் தன்மையில் பங்குகொள்வதாகும். இது எவ்விதத்திலும் இயேசுவினது உயர்ந்த பணியைக் குறைக்கவில்லை. எனவே, புனிதர்களை வணங்குதல் இறுதியாக எல்லா அருள்களையும் பொழியும் இறைவனில் சங்கமமாகின்றது. திருவழிபாட்டுச் செபத்தில் திருச்சபை தனது செபத்தைக் கேட்குமாறு இறைவனைத்தான் (புனிதர்களையல்ல) வேண்டுகின்றது.

நமது நிலை

புனிதர்கள் பற்றி, அவர்களது மகிமை, அவர்களது முன்மாதிரிகைகள், எமக்குக் காட்டும் படிப்பினைகள்பற்றி அறிந்த நாம் நமது நிலைபற்றி ஆராய்ந்து பார்த்தல் நலம்என்று எண்ணுகின்றேன். கிறிஸ்தவ எதிர்பார்ப்புகளுக்கு மாறாகப் பல கிறிஸ்தவர்கள் புனிதத்துவ அழைப்பையிட்டு அதிகம் அக்கறை காட்டுவதில்லை. அதனால் இறைவனுடன் ஒன்றித்து இருப்பதினால் ஏற்படும் நன்மைகளையெல்லாம் அடையத் தவறிவிடுகின்றோம். பாவத்திற்கும், சுய இச்சைகளுக்கும் எதிராகப் போராடி இறைவனுடைய புனிதத்துவத்தில் நுழைய அழைக்கப் பட்டவர்களாகிய நாம் சிலவேளைகளில் ஏனோ தானோ என்று வாழ்க்கை நடத்துகிறோம்.

இலங்கையில் பெரும்பாலான ஆலயங்கள் புனிதர்களின் பெயரில் அர்ப்பணிக்கப் பட்டுள்ளன. தேவ அன்னையின் பெயரில், புனிதர்களின் பெயர்ல் பல ஆலயங்கள். அதனால் இயேசுவை மையமாகக் கொண்ட ஆலயங்கள் மிக அருகியே காணப்படுகின்றன. நற்கருணை வழிபாடு, திருப்பலிபோன்ற முக்கிய வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், புனிதர்களுடைய வணக்கத்தில் அதிக சிரத்தை காட்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதர்களுக்கு நாம் கொடுக்கும் வணக்கம் சற்று மிதமிஞ்சிப் போவதை எல்லோரும் உணர்வோம். புனிதர் ஒருவர் சில புதுமைகளைச் செய்துவிட்டால் அவரை நோக்கிப் படையெடுக்கின்றோம். புதுமை நாடிகளாக நாம் மாறிவருகின்றோம். புதுமைகளுக்காக மட்டும் புனிதர்களை நாம் அணுகுவோமானல், எமது வாழ்க்கையில் முன்னேற்றத்துக்கு இடமிருக்க முடியாது. புனிதர்களின் வணக்கத்தினால் எமது வாழ்வு அவர்கள் பண்புகளினால் உயிரூட்டப் படவேண்டும். எமது வாழ்வில் ஏற்படும் மாற்றம், வாழ்வில் எதையும் ஏற்றுக்கொண்டு வாழும் மனப்பக்குவத்தைக் கொடுக்கவேண்டும். மலைபோல் துன்பம் வந்தாலென்ன, மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து வாழ்வு மலர்ந்தாலென்ன, எந்நிலையையும் சமாளித்து வாழவேண்டிய மன முதிர்ச்சியை (maturity) புனிதர் வணக்கம் நமக்குத் தரவேண்டும்.

புனிதர் வணக்கத்தில் சில மூட நம்பிக்கைகளையும் (superstitions) நாம் காணமுடிகின்றது. "எனது உள்ளக்கிடக்கையில் அலைமோதும் துயரங்களுக்குத் தீர்வுகொடுத்தால், நான் வேண்டுவது கிடைத்துவிட்டால் இத்தனை மெழுகுவர்த்தி கொழுத்துவேன்; எவ்வளவு அதிகமாகக் கொழுத்துகின்றேனே அவ்வளவுக்கதிகமாகப் புனிதர் அருள் வழங்குவார்" போன்ற நம்பிக்கைகளை எல்லாம் நாம் படிப்படியாகக் கைவிடவேண்டும். "தன்னையே உருக்கி மற்றவர்களுக்கு ஒளிகொடுக்கும்" மெழுகுவர்த்திபோல் எமது வாழ்வையும் மற்றவர்களுக்காகக் கொடுக்க வேண்டும்என்ற அதன் உட்கருத்தை மறந்துவிடுகின்றோம். புனிதர்கள் மெழுகுவர்த்தியின் தொகையைப் பார்த்து வரம்பெற்றுக் கொடுப்பதில்லை. யார்யார் கிறிஸ்தவனுக்குரிய பண்புகளுடன் வாழ்கின்றேமோ அவர்கள்மீதுதான் அதிகபற்றுக் கொண்டிருக்கின்றார்கள். உப்பு, மிளகு வைத்து நேர்த்திசெய்வது என்பன எல்லாம் அறியாமையினால் செய்யும் சில செய்கைகள். எமது வணக்கத்தை இலகுவாக்குவதற்கே சொரூபங்கள் உருவாக்கப்பட்டன. வெறுமையை நோக்கிச் செபிப்பது பலருக்குக் கடினமாக இருக்கலாம். அவர்களுக்கு உதவுவதற்காகத்தான் சொரூபங்கள்; தொட்டு மன்றுடுவதற்கல்ல.

புதிய அறிவுரைகள்

புனிதர்களின் வணக்கத்தில் ஏற்பட்ட இந்த மேலதிகத் தன்மை மூட நம்பிக்கைகள் இவற்றைக் குறைப்பதற்காகவே திருச்சபை சில புதிய சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்தி வருகின்றது. 2-ம் வத்திக்கான் சங்கத்தின் வழிநடத்தலுக்கு இணங்க உருவாக்கப்பட்டு 1969-ல் வெளிவந்த திருச்சட்டங்களை நாம் அறிதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பக்திமயத் (devotional) திருவிழாக்கள் குறைக்கப்பட வேண்டும்

பழைய பல பக்திமய திருவிழாக்கள் இறைவனின் மீட்புத் திட்டத்தோடு மிகச் சிறிய தொடர்பே கொண்டுள்ளன. அல்லது இயேசு, அவர் அன்னை, புனிதர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட பல்வேறு பெயர்களைக்கொண்டு எழுந்தனவாகும்.

உ-ம் தேவ அன்னையின் திருநாமம் (1683)
செபமாலை அன்னை (1716)
லூர்து அன்னை (1907)

இப்படியான திருவிழாக்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்தின், அல்லது சிறிய சமூகத்தின் திருவிழாக்களாகும். இப்படியான திருநாள் அந்தநாட்டு அல்லது அந்த இடத்து நாட்பட்டியலில் மாத்திரம் இடம் பெறும். லூர்து அன்னையின் விழா முன்பு எல்லா இடங்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இப்போது லூர்து அன்னையின் பெயர்கொண்ட ஆலயங்களில் மட்டும் கொண்டாடப் படுகின்றது. (மற்றைய இடங்களில் '' விரும்பினல் மட்டும்.'')

2. புனிதர்களின் வரலாறுகள் நன்கு ஆராயப் படவேண்டும்

1960ஆம் ஆண்டுப் பட்டியலில் இடம்பெற்ற பல புனிதர்கள் '' விரும்பினல் மட்டும் நினைவுகூரப்படலாம் '' (optional memoria) என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். புனிதர்களின் வணக்கம் தகுந்த சரித்திர அடிப்படையில் அமையவேண்டும். எச். டெலஹே (H. Delehaye) என்பவரின் அகழ்வு, வரலாற்று ஆராய்ச்சிகள் இவற்றுக்குத் துணை புரிந்துள்ளன. பல புனிதர்களின் சரித்திர அடிப்படை கேள்விக்குறியாக இருக்கின்றன. அவர்களில் சிலர் புனித பொனிபஸ், மாகிரட், கிறிஸ்தோபர், சூசன்னு, சிசிலியா, கதரீன் ஆகியோர். அதிக சரித்திர அடிப்படைகொண்ட புனிதர்கள் புதிய பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள்.

3. அதிக முக்கியத்துவம் வாய்ந்த புனிதர்கள் சேர்க்கப்பட வேண்டும்

உரோமை நகரம் புனிதர்களுக்குப் பெயர்பெற்றது. ஆயினும் உலகத்தின் ஒரு பகுதியிலிருந்து மட்டும் புனிதர்கள் முக்கியத்துவம் பெறுவது தகுந்ததல்ல. எல்லாக் காலத்திற்கும் ஏற்ற புனிதர்கள் இடம்பெறவேண்டும். அவர்களது முக்கியத்துவத்தை அறிவதற்காகத் தான் புனிதர்கள் வெவ்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— உரோம் தந்தையர் (Roman pontiffs)

— உரோமையர் அல்லாத வேதசாட்சிகள் (non–Roman martyrs)

— வேதசாட்சிகள் அல்லாத புனிதர்கள்.

4. புனிதர்களுக்கென ஒதுக்கப்பட்ட திகதிகள் மீண்டும் பரிசீலனை செய்யப்படவேண்டும்

பழங்காலம் தொட்டு புனிதர்கள் இறந்தநாளின் வருட நினைவே கொண்டாடப்பட்டன. இம்மண்ணில் அவர்கள் இறந்தநாள் விண்ணகத்தில் அவர்கள் பிறந்த நாள். புதிய பட்டியலில் இறந்த நாளே கொண்டாடப் படுகின்றது. அந்நாட்களில் வேறு ஏதாவது திருநாட்கள் வந்தால் அல்லது புனிதர்களின் இறந்த நாள் தெரியாத பட்சத்தில் அதற்கு மிக நெருங்கிய நாளில் (முன்போ, பின்போ) கொண்டாடலாம்.

5. புனிதர்களின் நாட்பட்டியல் அனைத்து மக்களுக்கும் உரியதாக (universal) ஆக்கப்படவேண்டும்

பட்டியல் எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் அமைந்ததாக இருக்கவேண்டும். ஒவ்வொரு காலத்திலிருந்தும் ஒவ்வொரு பகுதி மக்களிலிருந்தும் புனிதர்கள் இதில் அடங்கவேண்டும். இன்று உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட புனிதர்களினால் உலகின் கண்டங்கள் அனைத்துமே மகிமைப்படுத்தப் பட்டுள்ளன.

முடிவுரை

புனிதர்களை வணங்குவதில் '' சரித்திரம் '' படைத்த கிறிஸ்தவர்களாகிய நாம், எவ்வித மிகைப்படுத்தலையும் தவிர்க்க வேண்டும். எமது வாழ்வு மேலும் மேலும் இறைவனை மையமாக வைத்துப் பின்னப்பட வேண்டும். புனிதர்கள் வாழ்வு மாதிரி காட்ட, நாமும் மாதிரிகளாக வாழ்வோம். இறைவன்தான் முதல்வன், தலைவன். எம்முடைய உள்ளத்தில் நாமும் புனிதர்களாக மாறவேண்டும் என்ற விருப்பம் உண்டு. புனிதர் பட்டியலில் நாமும் இடம்பெற வேண்டுமானால் எமது வாழ்க்கை மாறவேண்டும் — இறைவனோடு ஒன்றிக்க வேண்டும் — அயலவரில் இறைவனைக் காணவேண்டும். நமக்குமுன் வாழ்ந்த புனிதர்கள் எமக்கு ஆவலைத் தூண்ட, அந்த ஆவலினால் எமது வாழ்வு புனிதமயமாகவேண்டும். மற்றவர்களும் எம்மைப் பின்பற்றி புனிதத்துவத்துக்கு அழைக்கப்பட வழி வகுப்போம். நாமும் இக்காலப் புனிதர்களாக வாழ முயல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

READING AMOS INTO OUR TIMES

SELVANAYAGAM, M. Jero

God's plan for mankind cannot be adequately grasped unless it is seen against the background of the signs of the present times. The prophetic echoes of Amos bear much meaning for the political and socio-economic milieu in which we are today.

Our political history before and after Independence shows that the people who struggled together to achieve freedom, are divided on ethnic and cultural differences. As it was in ancient Israel, here too, the function of the Judiciary seems at times unjust and having drastic consequences. The very laws that should safeguard and guide the rights of the people seem to have become a threat to them.

In the plantation sector, the economic exploitation as well as the enforcement of the Land Reform Act, have led the displaced estate labourers to the lowest rung of poverty.

Christians who are the people of the new covenant seem to be unaware of their greater responsibility to work for justice and equality. The same prophetic vocation and mission of Amos is an integral part of the ever-growing mission of the Church.

Therefore, this prophetic task must be concretely spelt out in united action by the members of the Church so that their response to the signs of our times may sound relevant and adequate.

THE CHALLENGE AND TASK OF INCARNATION

EMMANUEL, Seemampillai J.

In the static view of reality held by Christians earlier, incarnation meant the 'coming down and going up' of divinity into out of a Godless world. But now we are urged by the Church to take a dynamic and evolutionary view, in which incarnation will

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

be the visible concretisation or personalisation of God in a world already filled with his presence in diverse ways. The magisterium recently has awoken us to these challenges:

1. Incarnation, in the context of the other major religions of Sri Lanka (Buddhism, Hinduism & Islam), urges us to a sincere dialogue. Cf. Vatican 2, *Non-Christian Religions*, 2.

2. Incarnation, in the context of the cultures prevalent in Sri Lanka, urges us to a genuine inculturation of all our ecclesial realities. Cf. Vatican 2, *Missions*, 22. We, living in a period that concludes five centuries of colonialism, must take up the challenge of inculturating the Church in Sri Lanka. "Ecclesia semper reformanda est."

3. Incarnation, in the deteriorating context of our socio-economic realities, urges us to an urgent and loud prophetic contextualisation. Vatican 2, admitting to a degree of irrelevancy in the past, strongly speaks out for a Church that is in solidarity with the poor, the suffering and the oppressed. The Church has realised that earthly progress and the better ordering of human society is of vital concern for the Kingdom of God (Vatican 2, *GS*, 39), and has come to see socio-economic development of man not as a mere pre- or pro-evangelisation, but as a central task of the whole Church. Accordingly the Church has to discover ways and means of becoming a Church of the poor, instead of remaining as the 'rich' Church supporting the poor or working for the poor. Only a Church that is adequately contextualised can be adequately sensitive to the needs and problems of the region and, above all, dare to become the champion of the weak and the oppressed of our society.

THE DIGNITY OF LABOUR: A Christian Interpretation

ANTHONY. Stany

A person-oriented approach to labour occupies the central position in all social analysis and study of our age.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Early Old Testament writings grapple with the problem of labour in several places. The religio-theological interpretation of labour is seen against the background of God's creation in the book of Genesis. Perhaps the existential and historical conditions of his time induced the author of Genesis to interpret labour pessimistically. We are able to draw profound inspiration from biblical writings and recent Church documents towards a positive understanding of the values of labour.

Man cannot, and should not, view labour as mere productive potential; rather, collaborating with the creative power of God and filled with the spirit of Christ himself, man must explore the socio-economic necessity of labour and its indispensable role in the reconstruction of a just social order.

THE PSALMS IN LITURGY

RUBAN, Mariampillai

Mother Church wants Christians to use more frequently the psalms, which are the spontaneous prayer of the ancient Israelites. Although traditionally the psalter has been attributed to David, modern scholarship tells us that the psalms were composed over a period of many centuries by many authors, one of whom may have been David.

The psalms belong to various literary types: hymns, laments, thanksgivings, royal psalms and wisdom psalms.

Theology in the psalms:

God is presented anthropomorphically. He is loving, powerful; the Creator; and Lord of history.

Man, though formed from the dust, has been raised almost as high as the angels. He should turn away from his sins and remain faithful to the steadfast covenant love of Yahweh.

To pray a psalm effectively, I should relate it to my own context. We should make wider use of the psalms in our meditation and family prayer-groups.

More psalms should be set to music or should be used as inspiration for new Tamil hymns.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JOHANNINE CHRISTOLOGY

JEEVARATNAM, A. E.

For many Christians, the gospel according to John is the most precious book in the New Testament. It is the book on which above all they feed their minds and nourish their hearts and in which they rest their souls.

John, of all the New Testament writers, has the most penetrating gaze into the eternal mysteries and the eternal truths and into the very mind of God.

John presents Jesus as the Word of God, who was with God before creation. Thus Jesus, the word of God, becomes the most competent person to reveal the Father. Jesus' most startling claim is that he himself is the revelation of God. In revealing himself, he reveals God. This claim is characteristically set out in statements that are recognized by the use of the formula "I am. . ." E.g., "I am the resurrection and the life."

We also see that many of the Old Testament themes and symbols become real in the person of Christ. All hopes and expectations find fulfilment in Jesus.

SAINTS IN THE CHURCH

THEVASAHAYAMPILLAI, Y.

Veneration of saints is very common and strong among our Catholics. While making a good impact, this has also created some misunderstanding. In order to give a clearer view about the place of the saints in today's Church, I have tried here to analyze some salient aspects of the devotion to saints.

The Bible says that every Christian is holy and therefore calls every Christian a saint. But "saints" in common parlance denotes those who closely followed Jesus, acted to the best of their ability according to his word, and who now enjoy God's presence. We find a variety of saints exemplifying the qualities and teachings of Jesus our master. In this regard saints are models for our

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

imitation, and hope for the things unseen—namely, eternal life. The saints are holy only insofar as they share in the holiness of the Most Holy One. The only Holy One is God himself.

In the veneration of the saints, many Catholics seem to over-emphasize the importance of saints, forgetting God. This may be due to the fact that they do not see the real distinction between 'veneration' and 'worship'. Worship is only for God who is infinite, all-powerful and creator of all (including the saints).

Taking all these into consideration, the Church reformed the proper of the saints in 1969. By this reformation,

—devotional feasts were reduced

—critical examination was done on the historical data available about each saint

—the more important feasts were retained

—the calendar was made more universal

—the methods of celebration were revised.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org